


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிளாஸ்டிக் எனும் கொடூர அரக்கன்




நம் அன்றாட வாழ்க்கையில் எங்கும் நிறைந்ததாக இருக்கும் பிளாஸ்டிக்கின் நன்மைகள் மறுக்க முடியாதவை. குறைந்த செலவில் இலகுவாக உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு எண்ணிலடங்காத தீமைகளை செய்கின்றன.



நாளொன்றிற்கு 7000 மெற்றிக் தொன் திண்ம கழிவுகள் இலங்கையில் உருவாக்கப்படுவதாகவும் அவற்றில் அண்ணளவாக 6% ஆனவை பிளாஸ்டிக் கழிவுகள் என்றும் சில புள்ளி விபரங்கள் சொல்கின்றன. அதாவது தினமும் 420kg பிளாஸ்டிக் பொருட்கள் கழிவுகளாக சுற்றாடலுக்கு வீசப்படுகின்றன.

பிளாஸ்டிக் கழிவுகள் இலங்கை மட்டுமல்ல அபிவிருத்தி அடைந்த தேசங்களிலும் பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்திக் கொண்டுதான் உள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளை எரித்தால் வளி மாசடையும். புதைத்தால் இலகுவில் உக்காத காரணத்தினால் மண் மாசடையும். எனவே இலங்கை போன்ற நாடுகளில் குப்பை மேடுகளில் பிளாஸ்டிக் கழிவுகளை சேமிக்கும் பழக்கம் இருந்து வந்தது. சமீப காலமாக குப்பை மேடுகளும் நிரம்பி வழிகின்றன. எனவே மாற்று வழி தேட வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டோம்.

அந்த வகையில் கடந்த சில நாட்களாக இலங்கையில் கழிவு முகாமைத்துவம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. சமீபத்தில் இலங்கை அரசாங்கம் சில குறிப்பிட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்களுக்கு தடை விதித்திருக்கிறார்கள்.

ஒரு பிரபல தனியார் நிறுவனம் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தி தமது நிறுவன எல்லைக்குள்ளே வாகன தரிப்பிடத்திற்கான காப்பெற் வீதிகளை (plastic modified asphalt concrete) போட்டிருக்கிறார்கள். அதேபோல அதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் திருகோணமலை பகுதியிலே மாநகரசபையினர் கழிவு பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்தி வீதிகளை அமைத்திருக்கிறார்கள். இவை எல்லாம் ஒரு சிறந்த சமிக்கைகளை எமக்கு காட்டுகின்றன. சுகாதாரத்திற்கு மிகவும் கேடான ஒரு விடயம் பிளாஸ்டிக். இவற்றை எப்படி அழித்தாலும் அது சூழலுக்கு மாசு ஆகவே முடியும்.

புராண இதிகாசங்களில் வரும் உலகத்திற்கு தீங்கு செய்கின்ற அசுரர்கள் சாகாத வரம் பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்களை அழிக்க முடியாத இறைவன் உலகத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறு வேறு உருவத்திற்கு அவர்களை மாற்றி உலகத்தை காப்பார். அது போல அழியா வரம் பெற்ற பொலித்தீன்களை வேறு வடிவங்களுக்கு மாற்றி சூழலுக்கு தீங்கற்றதாக மாற்றுகின்ற நடவடிக்கைகளை நடைமுறைக்கு கொண்டு வருவோமாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஜ.வி. மகாசேனன்
இ. விநோஜன்

வடிவமைப்பாளர்கள்
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு. கீர்த்தனன்
க. குகவர்மன்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

தும் பல்சுவை மின்னிதழ்

## இவ்விதழில் துமித்துளை...

04 திருக்கோணேச்சரம் - வரலாற்றுப் பின் நகர்வு (14.04.1624)
08 குறுக்கெழுத்துப் போட்டி
09 இறையாண்மை
12 ஒரு வார்த்தை சொல்ல ஒரு வருசம்
16 எனக்கு கொரோனாவா?
18 திரைத்தமிழ் - சக்ர
20 சித்திராங்கதா
22 சுயமார்புப் பரிசோதனை
23 நவீன வேதாள புதிர்கள்
24 சூழல் தரமிழத்தலில் செல்வாக்கு செலுத்தும் சமூகக் காரணிகள்
26 காற்றுக்கு பேர் என்ன?
27 ஆங்கில மொழியும் சேக்ஸ்பியரும்...
32 வழுக்கியாறு
34 ஈழச் சூழலியல்
37 பெண்களும் உளவியல் முரண்பாடுகளும்
40 சிங்ககிரித்தலைவன்
42 IPL திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சரம் – வரலாற்றுப் பின் நகர்வு (14.04.1624)

ஒரு மனிதனால் இந்தப்பெரிய உலகில் வாழவல்ல அதியுச்ச காலம் நூற்றியிருபது ஆண்டுகளாம். ஆனால் இந்த உலகம் உருவாகி பலகோடி ஆண்டுகள் கடந்துவிட்டன. அத்தனை ஆண்டுகளிலும் தோன்றி அழிந்து போன எத்தனையோ பேரின் உழைப்பினாலே இன்று நாம் காணும் இந்த உலகம் இவ்வளவு வளர்ந்து நிற்கிறது. ஏன் இப்போது நாம் ஒவ்வொருவரும் கூட எமக்கான வாழ்நாளில் எம் அடுத்த தலைமுறைக்காக இந்த உலகத்தை இன்னும் கொஞ்சம் செழுமைப்படுத்தவே முயன்று கொண்டிருக்கிறோம். அந்த வகிபாகமாகவே இலக்கியங்களையும் இயந்திரங்களையும் தொடர்ந்து உருவாக்கி வருகின்றோம்.

யாழ்ப்பாண நூலகம் வெந்தழலில் எரிந்த அந்த கரியநாளில் அந்நாள் வாழ்ந்த எம்முன்னோர் கூட்டம் நூலக வாசலில் நின்று மார்பிலும் தலையிலும் அடித்து அடித்து குளறிய காட்சியை கண்டு நெகிழ்ந்த ஓர் ஆங்கில எழுத்தாளர் இம்மக்கள் தம் எதிர்கால தலைமுறை மீது கொண்ட அக்கறையையும் அவர் தம் அறிவின் உச்சத்தையும், கல்வி நாட்டத்தையும் கண்டு வாயடைத்து வியந்ததாய் எழுதி வைத்துள்ளார்.


எம்முன்னோர்தம் இது போன்ற செயல்களே அடுத்ததலைமுறைக்கான தமிழ்கூறு நல்லுலகை கட்டியமைப்பதில் உள்ள ஆர்வத்தை அறைகூவுகிறது.

இதே போலொரு தருணம். ஆனால் இப்போதல்ல. கிட்டத்தட்ட நானூறு வருடங்களிற்கு முன். ஈழத்தில் கோகர்ணம் என்றழைப்பட்ட நிறைகடல் அரவும் கோணமாமலையில் 1624ம் ஆண்டு சித்திரை முதலாந்திகதி நடந்த அந்தக்கரிய சம்பவத்தையும் இப்போது கொஞ்சம் நினைவு கூறுவோம்.

காலப்பெருங்கடலில் கற்பனை என்கிற பேராயுதம் கொண்டு கொஞ்சம் பயணித்துப் பாருங்கள். மூன்றுபுறமும் ஆர்ப்பரிக்கும் கடலின் நடுவே உயர்ந்து நிற்கும் குன்றில் வனப்பும் செழிப்பும் மிகுந்து பிரமாண்டமாய் ஓங்கி நிற்கும் கோணநாதரின் கோபுர அழகைக் காண்பீர்கள். வாருங்கள் உங்களை அன்றைய பிரமாண்ட ஆலயத்திற்கு அழைத்துச் செல்கிறோம்.

சித்திரைக்கொண்டாட்ட இரதோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுமார் 600 பாகம் நீளமும் 80 பாகம் அகலமும் கொண்ட இராஜ கோபுர வாசலில் இருந்து ரதம் புறப்பட ஆயத்தமாகிறது.

தற்போது ஆலயம் இருக்கும் கோட்டைப்பகுதி முழுவதும் சேர்த்து அன்று மூன்று பெரும் ஆலயங்கள் காணப்பட்டன. அவை, மாதுமை அம்பாளின் பிரமாண்டமான கோயில், ஸ்ரீநாராயணர் கோயில், மலையுச்சியில் மாதுமை அம்பாள் சமேத கோணேசர் கோயில் என்பனவாகும்.



**அட்டைப்படம் சொல்லும் கதை**

**புகைப்படப்பிடிப்பாளர்:- கார்த்தி ஹயன்**

**புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் :- திருகோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையடிவாரத்திலிருந்து நாம் செல்லத் தொடங்கும் போது மலையின் வடக்கேயும், தெற்கேயும் தோன்றும் உயர்ந்த பாறைகள் படிப்படியாக உயர்ந்து செல்கின்றது. இப்பாறைகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பு பரந்த சமதரையாகக் காணப்படுகின்றது. இச்சமதரையின் தென்திசையிலேயே மாதுமை அம்பாளின் பிரமாண்டமான கோயில் அமைந்திருக்கிறது. மாதுமையம்பாள் எழுந்தருளிய கோயில், மிக உயர்ந்த கோபுரத்தோடு கிழக்கு நோக்கிய வாயிலைக் கொண்டிருக்கிறது. (தற்காலத்தில் கச்சேரியும், அரசாங்கப் பணிமனைகளும் உள்ள இடமே, அன்று மாதுமையம்பாள் ஆலயம் அமைந்திருந்த இடமாகும்) உள்ளே சென்று தரிசித்தால் கற்பக்கிரகத்தில் அம்பாளுடைய சிலாவிக்கிரகமும், ஏனைய பரிவார மூர்த்திகளின் ஆலயங்களும் அமைந்திருக்கின்றன.

மாதுமை அம்பாள் ஆலயத்திற்கு வடகிழக்கே தான் பாபநாசதீர்த்தக்கேணி அமைந்திருக்கிறது. இந்தத் தீர்த்தம் நீள்சதுர வடிவில் கருங்கற்களாலான படித்துறைகளைக் கொண்டிருக்கிறது. கடல் மட்டத்துக்கக்கீழ் ஆழமுடையதாகக் காணப்பட்டமையினால் வற்றாத நீருற்றாகக் காணப்படுகிறதாம். கோயிலுக்குச் செல்லும் மக்கள் எல்லோரும் தீர்த்தமாட இதனையே பயன்படுத்துகிறார்கள். ஆதலால் தீர்த்தோற்சவத்தன்று சுவாமி தீர்த்தமாட என வேறொரு பாபநாசக்கிணறு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கேணிக்கு வடக்குப் பக்கமாகத் தீர்த்த மண்டபம் ஒன்று காணப்படுகிறது. சுவாமி தீர்த்தமாடிய பின் இம்மண்டபத்தில் எழுந்தருளுவதால், இதனை ஆஸ்தான மண்டபம் என்றழைப்பார்களாம்.

மாதுமை அம்பாளின் ஆலயத்தை சுற்றியுள்ள பரந்து விரிந்த சமதரையிலே உள்ள தேரோடும் வீதிக்கு கோணநாதரின் ரதம் வந்தடைகிறது. மடங்களும், மாடங்களும் ஏராளம் நிறைந்து உள்நாட்டு, வெளிநாட்டுப்பக்தர்கள் சூழ கோணநாதர் ஆரவாரமாய் ரதமேறி வருகிறார். காணுங்கள்.

HAYAN PHOTOGRAPHY

கோணேசப் பெருமானுடைய இரதம் மாதுமை அம்பாள் ஆலயதைச் சுற்றி வந்து, மலையடிவாரத்தைத்தாண்டி, தற்காலத்தில் பட்டணமாக மாறியுள்ள பிரதேசங்களை வலம் வந்து, வடதிசைக்கரையோரமாகவுள்ள வீதிவழியாகக் கோணேஸ்வரத்தை மீண்டும் அடைவராம்.

மாதுமையம்பாள் ஆலயத்துக்கும், பாவநாச தீர்த்தம் இருந்த இடத்திற்கும் மத்தியில் ஒரு பாதை ஏறிச்செல்கிறது. அது வழியே செல்லும்பொழுது, மற்றுமொரு சமதரை காணலாம். அங்கும் கிழக்கு நோக்கியதாய் உயர்ந்த கோபுரத்தைக் கொண்ட இன்னுமொரு ஆலயம் காணப்படுகிறது. ஆனால் இக்கோயில் அமைந்திருக்கும் சமதரை மாதுமையம்பாள் ஆலயம் அமைந்திருந்த சமதரையை விடச்சிறியது. இச்சமதரையின் கிழக்கு, செங்குத்தான மலைப்பாறைகளைக் கொண்டதாகவும், வடக்கேயும் தெற்கேயும் சரிவான மலைச்சாரல்களை உடையதாகவும், மேற்கே முரட்டுப் பாறைகளைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.

இதுவே குளக்கோட்டு மன்னனால் எழுப்பப்பட்ட ஸ்ரீநாராயணர் கோயிலாகும். கற்பக்கிரகத்தில் ஸ்ரீமகாலெட்சுமி சமேத நாராயணமூர்த்தியின் சிலா விக்கிரகம் பிரதிட்டைசெய்யப்பட்டிருக்கிறது. (இன்று காவல்துறையினரின் குடியிருப்பு, கிளிவ் கொட்டேஜ் என்பவற்றோடு இரண்டாவது உலகமாகயுத்த காலத்தில் பொருத்தப்பட்ட விமான எதிர்ப்புப் பீரங்கி அமைந்துள்ள நிலப்பகுதியே அன்று நாராயணர் ஆலயம் இருந்த இடமாகும். ஐந்து அடிஉயரமான ஸ்ரீ நாராயணமூர்த்தி, மகாலெட்சுமி ஆகிய விக்கிரகங்கள் சிதைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டு இத்திருவுருவங்கள் சீர்செய்யப்பட்டு கோணேசர் கோயிலில் இன்று வைக்கப்பட்டள்ளது)

ஸ்ரீ நாராயணமூர்த்தி ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக இன்னொரு பாதை செல்கிறது. இப்பாதை வழியே பயணித்தால் கிழக்குப் பக்கம் உயர்ந்த சரிவும், மேற்குப் பக்கத் தாழ்ந்த சரிவும் காணப்பட்டவாறு கரடுமுரடான ஒரு கற்பாதை தெரிகிறது. மலையின் இயற்கை அமைவிற்கேற்ப பாதைகள் உயர்ந்தும், தாழ்ந்தும் காணப்படுகின்றன. ஆனால் இடைக்கிடை சில கருங்கற்படிகளுத் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பாதை வழியே பயணித்து இராவணன் வெட்டை அடையும்போது, குறுகிய ஆழமான பள்ளம் ஒன்று தென்படுகிறது. இதைக் கடந்துதான் தொடர்ந்து செல்ல வேண்டியிருக்கிறது. குளக்கோட்டு மன்னனே இப்பள்ளத்தை நிரப்பும் திருப்பணியைச் செய்துள்ளானாம். இராவணன் வெட்டைக் கடந்து சென்றால் மலையுச்சியில் மூச்சு வாங்கியபடி ஒரு சமதரையைக் காணமுடிகிறது. இச்சமதரையிலேயே பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாதுமையம்பாள் சமேத கோணேசர் ஆலயம் அமையப்பெற்றிருக்கிறது.

தெட்சணகைலாசம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேஸ்வரத்தில் மாதுமை அம்பாள் சமேத கோணேசப்பெருமானும், கருவறையில் சிவலிங்கத் திருமேனியும் (பாணலிங்கம்) பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறது.
வழக்கமாக இந்த ஆலயத்தின் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த விலைமதிப்பற்ற இரத்தினமணிகளின் பிரகாசம், தூரக் கடலில் செல்லும் கடற்பயணிகளுக்கும், மாலுமிகளுக்கும் கலங்கரை விளக்கமாகப் பயன்படுகிறதாம்.

இரதோற்சவம் ஆலயத்தைக் கடந்து நகரிற்குள் சென்று கொண்டிருந்த சமயம் மக்கள் கூட்டத்தில் ஒரு சலசலப்பு கேட்கத் தொடங்கியது. அந்தணர்களிடையே எங்கோ கைகலப்பு உண்டானதாக மக்கள் பரவலாக பேசிக்கொண்டிருந்தனர். ஆலய நிர்வாகத்தாரும் பொது மக்களும் உண்மையில் நிகழ்வது என்னவென்றறியாமல் தடுமாறி ஓடிக்கொண்டிருக்கின்றனர். அந்தணர்கள் யாவரும் ஆலயத்திற்குள் வந்து ஒளிந்து கொண்ட பின்னரே உண்மை ஓரளவு புரியத்தொடங்கியது. கைகலப்புகள் நிகழ்ந்தது அந்தணர்களிடையேயல்ல. அந்தணர் வேசமிட்டு வந்த சில அந்நியர்களாலே என்று.

“யாரவர்கள்? பறங்கியர்கள்.. இங்கே வந்துவிட்டார்களா? இங்கும் வந்துவிட்டார்களா? ஐயையோ.. ஆலயச் சொத்துக்களை சூறையாட த்தான் வந்திருக்கிறார்களா? வித்தியாசமான ஆயுதங்கள் வைத்திருக்கிறார்களே.. ஆலயத்தை இடித்து விடப்போகிறார்களா? ஐயோ.. கோணநாதரே இந்த அநியாயத்தை காண்பீரோ.. ஏதுஞ் செய்ய மாட்டீரோ? நாம் என்ன செய்வோம்? எங்ஙனம் ஆலயத்தை காப்போம்? வல்ல இறையே எம் உயிரே பிரிந்தாலும் ஆலயத்தை பறங்கியன் கைவைக்க அனுமதியோம்.” இவையெல்லாம் கூட்டத்தில் பதறி சிதறி ஓடிய மக்களின் குரலோசைகள்..


எவ்வளவு கொடூரமனம் படைத்தவர்களாய் இருந்தாலும் பிரமாண்ட அந்த கோணேசர் ஆலயத்தை முழுவதும் சரித்துவிட வந்த போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்ரன்ரைன் டீசா ஆலய கட்டுமான பேரழகைக் கண்டு வாயடைத்து நின்றான். அழிக்க மனமில்லை. ஆனால் அழித்தே ஆகவேண்டுமென ஆணை. மதவெறி. ஒரு முடிவு செய்தான். இந்தப்பேரழகை




*கொன்ஸ்ரன்ரைன் டீசா வரைந்து அனுப்பிய ஆலய வரைபடம்*

அழித்து சரிக்க முன் ஓவியமாக தீட்டி வைக்க விரும்பினான். வரைந்தான். பிறகு கோயிலை இடித்துத் தரைமட்டமாக்க தொடங்கினான்.

இதற்கிடையில் அங்கு நின்ற மக்களும் அந்தணர்களும் அச்சமிகுதியில் இருந்தாலும் தாம் உயிர் பிழைத்தால் போதும் என ஓடி ஒளியாமல் இயன்றவரை ஆலய பெருஞ்சொத்துக்களையும் சிற்பங்களையும் மறைவாக எடுத்துக்கொண்டு தம்பலகாமம் பிரதேசத்தை நோக்கி இரகசியமாக வேகமாக ஓடினார்கள். கோணநாதரை ஆபத்திலிருந்து காக்க அவர்களிற்கு வேறு வழி தெரியவில்லை. இன்றைய தூரக்கணக்குப்படி ஏறத்தாள இருபத்தைந்து கிலோமீற்றர்களை அதிவேகமாக ஓடிக்கடந்து கோணநாதரையும் ஆலயச்சொத்துக்களையும் அறங்காவல் செய்தனர். இன்று அவ்விடமே தம்பலகாமம் ஆதிகோணேசர் ஆலயமாக திகழ்கிறது. ஆலயம் இடித்து தரைமட்டமாக்கப்பட்ட பின்னும் கூட மலையுச்சியில் வெறும் வெளியில் கோணநாதரை அவர்கள் வழிபட மறக்கவில்லை. கோணேசப் பெருமானின் ஆலயத்தை அழித்தாலும் நித்திலம் கொழிக்கும் கோணமாமலையில் பெருமானின் இருப்பையழிக்க எவராலும் முடியாது என்கிற உறுதியான நம்பிக்கையோடு தொடர்ந்து மலைப்பூசை நடத்திவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவர்கள் ஆற்றிய அருஞ்செயலாலே இன்று இராவணன்வெட்டிற்கு அண்மையில், உச்சியின் சமதரையில் மட்டுமாவது முப்பத்து மூன்றடி சிலையோடுள்ள கோணேசர் ஆலயமாக எமக்கு எஞ்சிநிற்கிறது. காலத்திற்குக்காலம் ஏற்பட்ட அரசியற் காரணங்களால், ஆலயத்தின் நிலப்பகுதியில் அரசகட்டிடங்களும், காவற்படைகளும் நிலைகொண்டுவிட்டன.

கோணேசர் ஆலயத்தை நிர்மூலமாக்கியபோது போர்த்துக்கேய படையின் தளபதி இங்கு கைப்பற்றிய சுவடுகளையிம் ஓவியங்களையும் போர்த்துக்கலிலுள்ள லிஸ்பனுக்கு அனுப்பி வைத்துள்ளான். இவை லிஸ்பனிலுள்ள அஜுடா நூல் நிலையத்தில் இன்றும் வைக்கப்பட்டுள்ளது.

எம்முன்னோர் தம் மகத்தான பணியை நாம் அறிகையில் நம் அடுத்த தலைமுறைக்காய் நாம் ஆற்றும் பணிகள் குறித்த கேள்விகள் எம்மை மௌனிக்க வைக்கிறது என்பதே உண்மையாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிவபூமியாக விளங்கிய ஈழத்தில் கோகர்ண விகாரையை உடைத்துவிட்டே கோயிலைக்கட்டினார்கள் என்கிற அபத்த வாதங்களையும் கேட்டு பொறுமை காப்பதும், குப்பைகளை அகற்ற அங்கு நடராஜர் சிலைகளை கொண்டு போய் வைத்து ஈனச்செயலாற்றுவதும் எம் அடுத்த தலைமுறை மீது நாம் கொள்ளும் அக்கறையின்மையினையே காட்டுகிறது.

எம் முன்னோர்களும் நம்மைப்போன்றவர்களே, எம்மை விட நாகரீகம் காணாத உலகில் வாழ்ந்து மறைந்தவர்கள். அவர்கள் யாருக்காக உழைத்தார்கள்? நமக்காக உழைத்தார்கள். நாம் இனியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கூடாது

நம் சங்கடமான மௌனங்கள் எப்போதும் இங்கு சம்மதத்தின் அறிகுறியாகவே எடுத்துக் கொள்ளப்படுவது எவ்வளவு பெரிய அவலம்? வரலாற்றினனை நாம் தெரிந்து கொள்வது எம் மூத்த இனத்திற்கு நாம் காட்டும் நன்றி மட்டுமல்ல. அடுத்த தலைமுறைக்கான நம் பொறுப்பும் ஆகும்.

ஓர் இனத்தின் இறந்தகாலம் பெருமையுடையதாய் இருக்கலாம். அந்தப்பெருமை இறந்தகாலத்தோடு நின்றுபோனால் அது அந்த இனத்தின் மலட்டுத்தன்மையையே காட்டும்.

***சிந்தியுங்கள்!***

# உலகின் பெருமதியான பலூன்கள்






**செய்வதென்று தீர்மானித்து விட்டால் தடையென வரும் எதுவும் உடையும்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | 3 |
| ெ | | | | | 4 | | |
| 5 | | | 6 | | | | |
| | | | | | 7 | | |
| 8 | | | | | | | |
| | | | | | 9 | | |
| | 10 | | 11 | | | | |
| 12 | | | 13 | | | | |




## இடமிருந்து வலம்

1. 63 நாயன்மார்களுள் ஒருவரான பாண்டிய மன்னர்
2. சூழ்ச்சி
5. ஆரியச்சக்கரவர்த்திகளின் தலைநகரம்.
7. யாழிசைத்துப் பாடுபவர்கள் ( குழம்பி )
8. இலங்கையில் காகித தொழிற்சாலை அமைந்துள்ள இடம்
12. மரம்
13. நவரத்தினங்களுள் ஒன்று. ( குழம்பி )

## மேலிருந்து கீழ்

1. சித்திரைத் தமிழ் புத்தாண்டு பற்றிக் கூறும் சங்ககால இலக்கியம்.
3. இலங்கையில் குறைந்தளவு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் மாவட்டம்
4. வரலாற்றிற்கு முற்பட காலத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழ்ந்த பூர்வீகக்குடி
6. இன்றைய கேரளாவை ஆண்ட புகழ் மிக்க தமிழ் மன்னர் வம்சம் ( தலைகீழாக)
9. போரில் வெற்றி பெற்ற வீரனைப் போற்றிப் பாடப்படும் தமிழ் இலக்கியவகை
10. ஆசிரியர்
11. மின்தடையை அளக்கப்பயன்படும் சர்வதேச அலகு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சு | ய | ஸ் | | 2 ஆ | 3 ம் | | 4 க |
| ந் | | | | 5 தி | ங் | 6 க | ள் |
| 7 த | 8 ர் | 9 ப் | பை | | 10 கா | ல் | வ |
| 11 ர | ம் | மை | | | வெ | | ன் |
| 12 கா | த் | த | 13 வ | 14 ரா | ய | 15 ன் | |
| 16 ண் | தா | க | ட | ம் | | 17 மீ | 18 சை |
| 19 ட | த | த் | ம் | வ | ழி | | வ |
| 20 ம் | ய | பு | | க | | 21 ஓ | ம் |

## குறுக்கெழுத்துப்போட்டி - 19

சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி :-

www.thumi.org

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறையாண்மை




அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

இறையாண்மை அரசின் மூலக்கூறுகளில் முக்கியமானதாகும். இறையாண்மை இன்றி அரசு செயல்பட முடியாது. இறையாண்மை தான் அரசை இதர சங்கங்களில் இருந்து உயர்வானதாகக் காட்டுகிறது.

**இறையாண்மை என்கிற கருத்தை அறிமுகப்படுத்தியப் பிறகுதான் தற்கால அரசு முழுமை பெற்றதாகக் கருதப்படுகிறது.**

இறையாண்மை, தற்கால அரசியலில் முக்கியத்துவம் பெற்றாலும் அரசியல் அறிவியலின் தந்தை என்று கருதப்படும் அரிஸ்டாட்டில் காலத்தில் இருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

அரிஸ்டாட்டில், இறையாண்மையை அரசின் "உயர்வான அதிகாரம்" என்று கூறியிருக்கிறார்.

**இடைக்காலத்தில் ரோமன் சட்ட வல்லுனர்களும் இந்த கருத்தை அதிகமாக அறிந்திருந்தனர். ஆனால் ஜீன் போடின் என்பவர் தான் தன்னுடைய "குடியரசைப்பற்றிய ஆறு நூல்கள்" என்ற நூலில் இறையாண்மை என்ற கருத்தை முதன்முதலாக முறைப்படியாக பயன்படுத்தினார்.**

இறையாண்மை என்ற சொல்லானது லத்தின் மொழியில் 'சூப்பரானஸ்' என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும்.

அதன் பொருள் "உயர்வானது" என்பதாகும். இறையாண்மையின் முழுமையான பொருளை அறிந்து கொள்வதற்கு அதுகுறித்து அரசியல் அறிஞர்கள் பலர் கூறியுள்ள விளக்கங்கள் உதவியாக இருக்கும். அவற்றில் சிலவற்றை இங்கு காண்போம்.

ஜீன் போடின் கருத்துப்படி இறையாண்மை என்பது குடிமக்களின் மீது சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத, தொடர்ந்து செலுத்தப்படும் உயர்வான அதிகாரம். அதனை அரசு பயன்படுத்துகிறது.

பொல்லாக் அவர்கள், இறையாண்மை என்பது உயர்வான அதிகாரம், அது தற்காலிகமானதோ, மற்றவர்களுக்கு அளிக்கக்கூடியதோ, ஒரு சில சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதோ கிடையாது. உலகில் வேறு எந்த அதிகாரத்துக்கும் பதில் அளிக்கக்கூடியதோ, மாற்றக்கூடியதோ அல்ல என்கிறார்.

பர்ஜர் அவர்கள் இறையாண்மை என்பது முழுமையானது. வரையறை இல்லாத அதிகாரத்தை மக்களின் மீதும் மற்றும் உள்ள சங்கங்களின் மீதும் செலுத்தக் கூடியதாகும், மக்களிடம் இருந்து பணிவைப் பெறுவதற்கான முழு அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது.

லாஸ்கியின் கருத்துப்படி இறையாண்மை என்பது சட்டப்படியாக, தனிமனிதர்களின் மீதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது குழுக்களின் மீதும் செலுத்தப்படும் அதிகாரமாகும். இது மக்களை பணிய வைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

மேலே கூறப்பட்ட விளக்கங்களில் மாறுபாடுகள் இருந்தாலும் இறையாண்மை என்பது உயர்வான அதிகாரம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இறையாண்மையின் அடிப்படைக் கருத்தானது, அதிகாரம், சட்டம் இயற்றுவது, கட்டளை பிறப்பிப்பது, அரசியல் முடிவுகளை எடுப்பது, தனி நபர்கள் மற்றும் உள்ள இதர சங்கங்களையும் தன் ஆட்சி எல்லைக்குட்பட்டவர்கள் மேல் செலுத்துவதாகும்.



இறையாண்மையை இரண்டு விதமாக பிரிக்கலாம். அவை

### அ) உள் இறையாண்மை

அதிகாரத்தைப் பயன்படுத்துபவர் உள்நாட்டில் இருக்கும் தனி நபர்கள் மற்றும் சங்கங்களின் மீது அதிகாரத்தை செலுத்த அதிகாரத்தை பெற்றவர் ஆவர்.

### ஆ) வெளி இறையாண்மை

அதிகாரத்தை செலுத்துபவர்கள் மீது இதர நாட்டவரோ அல்லது சர்வதேச சங்கங்களோ அதிகாரத்தை செலுத்தாமல் சுயமாக செயல்படுவதாகும். தற்கால அரசானது நாட்டின் உள்விவகாரங்களில் உயர்வான அதிகாரத்தையும், மற்ற வெளிநாட்டு அரசாங்கத்தின் கட்டுபாடு இல்லாமலும் இருப்பதாகும்.

**<u>இறையாண்மையின் தன்மைகள்</u>**

1. சட்ட அடிப்படையில் இறையாண்மை முழுமையானது.

2. இறையாண்மை நிலையானது. அரசு இருக்கும் வரையில் இறையாண்மையும் இருக்கும். அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படும் போது இறையாண்மை அழிந்து விடுவதில்லை. ஆனால், அரசாங்க அதிகாரத்தைப் பெறுபவர்களிடம் கொடுக்கப்படுகிறது.

3. அடுத்து அரசின் இறையாண்மையானது அரசு எல்லைக்குட்பட்டவர்கள் அனைவருக்கும் பொருந்துவதாகும்.

4. இறையாண்மையை மாற்ற இயலாது. அரசு அழிந்தால் தான் இறையாண்மையும் அழியும்.

5. கெட்டல் (Gettel) அவர்களின் கதிருத்துப்படி, “இறையாண்மை முழுமையாக இல்லாவிட்டால் அரசு இருக்க முடியாது. இறையாண்மையை துண்டுபோட்டால் ஒன்றுக்கும் மேற்பட்ட அரசு இயங்குவது போன்றதாகும்”.

ஆனால் கூட்டாட்சி என்ற கருத்து தோன்றியவுடன், டாக்குவில், வீட்டன் மற்றும் கேலக் போன்ற அறிஞர்கள் இரண்டு இறையாண்மைகள் இருப்பதாகக் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இறையாண்மை பிரத்தியேகமானது. அரசு மட்டும் தான் இறையாண்மை அதிகாரத்தைப் பெற்று சட்டப்படியாக மக்களைப் பணிய வைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.


இறையாண்மையின் அனைத்து தன்மைகளும் சட்ட இறையாண்மை என்ற கருத்துக்கும் வித்தியாசமானதாகும். அவை முழுமையான முடியாட்சியினால் பிரதிபலிக்கப்படுகிறது. மக்களாட்சி, கூட்டாட்சி, பன்மை மற்றும் அரசியலமைப்பின்படி அமையாத அரசாங்கங்களில், இறையாண்மை அதிகாரம் எவற்றில் அல்லது எங்கு இருக்கிறது என்பதைக் கண்டறிவது கடினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயரளவிலான இறையாண்மை:**

பெயரளவிலான இறையாண்மை என்பது பெயரளவில் மட்டுமே உள்ளதாகும். இது மன்னரின் அல்லது அரசரின் செயல்படுத்தப்படாத அதிகாரத்தைக் குறிப்பதாகும். கொள்கையளவில் அரசர் இன்றும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். ஆனால், நடைமுறையில் இறையாண்மை அதிகாரம் மற்றவராலோ அல்லது பலராலோ செயல்படுத்தப்படலாம்.

பெயரளவு இறையாண்மை என்பது அதிகாரத்தின் அடையாளமாகவே மட்டும் இருக்கும். பெயரளவுக்கான இறையாண்மை அதிகாரம் உடையவராக பிரிட்டன் நாட்டு அரசர் உள்ளார். அரசர் பெயரளவிற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். அவர் உண்மையான இறையாண்மை அதிகாரம் செலுத்தவில்லை. உண்மையான அதிகாரங்கள் அனைத்தும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்றம் ஆகியவற்றால் செயல்படுத்தப்படுகின்றன.




இந்தியாவிலே குடியரசுத் தலைவர் பெயரளவிலான இறையாண்மையையும் பிரதமர் தலைமையில் அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்கள் உண்மையான அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள்

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த இறையாண்மை என்றால் என்ன எனும் கட்டுரையினை தழுவி மாற்றங்களுடன் இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

சாரல் தூறும்...............!!!!!

## வாசகர்கள் அனைவருக்கும் சித்திரை புத்தாண்டு வாழ்த்துகள்!!!





தெற்காசிய பிரந்தியம் தமக்குள் ஆள்புல எல்லைகளாலும், மத அடையாளங்களால் பிளவுபட்டாலும் மரபில் ஒருமித்தவர் என்பதை பறைசாற்றும் திருநாளே சித்திரைப் புத்தாண்டு.

தொன்மைகளை தேடுவோம் மனிதராய் ஒன்றிணைவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வார்த்தை சொல்ல வருசம்





இ.தனிஸ்ரன்

"இது ஒரு பொன்மாலை பொழுது
வான மகள் நாணுகிறாள்
வேறு உடை பூணுகிறாள்"

வெளியில் மாலை மயங்க ஆரம்பித்திருக்க, இவனோ ஹெட்செட்டினூடாக ஹரிஹரன் எனும் காந்தத்தை காதுகளில் ஒட்டி விட்டு எழுதிக்கொண்டிருக்கிறான்.

ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து ஆறுகள் அருகிலே குடியேற்றத்தை அமைத்ததிலிருந்து மனித நாகரிகத்தின் எழுச்சி ஆரம்பிக்கிறது. முதல் முதலில் சிறப்படைந்த நாகரீகம் யூப்பிரட்டீஸ் , டைகிரீஸ் என்ற இரு நதிகளையும் அண்மித்த மொசப்பதேமியா நாகரீகம் ஆகும். அதாவது தற்போதைய ஈராக். இங்கு வாழ்ந்த சுமேரியர்கள் தான் முதன்முதலில் நாட்காட்டியினை வடிவமைத்ததாக வரலாறு கூறுகிறது. அதன் பின் வந்த இன்னொரு உயர் நாகரீக மக்களான எகிப்தியர்களும் நாட்காட்டி ஒன்றை கொண்டிருந்தனர். அமெரிக்க பழங்குடியின மாயா இனத்தவர் வடிவமைத்த நாட்காட்டி, உலகின் பல முக்கிய நிகழ்வுகளை எதிர்வு கூறுவதாய் இருந்தது.

//ஜன்னலில் தெரியும் நிலவுடனே
சண்டை போட்டது நினைவில்லையா
மரம் செடி கொடியிடம் மனசுக்குள்
இருப்பதை சொல்லியது நினைவில்லையா//



ஹரிஹரன் கெட்செட்டிலிருந்து இறங்கி செவி கால்வாயிலிருக்கும் காற்றில் கலந்து செவிப்பறை மென்சவ்வை முட்டி மோதி செவிச்சிற்றென்புகளில் ஏறி நடந்து நீள்வட்ட ஜன்னல் வழியாக நத்தைச்சுருளுக்குள் நுழைந்தார்.

நினைவில்லையா நினைவில்லையா என்று காந்தக்குரலோன் கேட்க, மூளையம் இவன் மரத்தோடு, நிலவோடு, புத்தகங்களோடு தன் காதலை பேசிய கதையை மீள ஞாபகப்படுத்தியது.



"உன் விழியில் விழுந்தேன்
விண்வெளியில் பறந்தேன்
கண்விழித்து சொர்ப்பணம் கண்டேன்
உன்னாலே"

அவள் நினைவுகள் படையெடுக்க ஆரம்பிக்கிறது. அவள் சிரிப்பும் காந்தக் கண்களும் நினைவில் நங்கூரம் எறிந்தது.

"சிரிக்கும் போது கண்ணில் மின்னல்
தெறித்து ஓடுதே அதுவா"

சிதறும் சிரிப்பில் அணுங்கும் குழந்தையாய் புன்முறுவல் பூக்கும் போது விரியும் உதடு, சிவக்கும் கன்னம், சிமிட்டும் கண் மடல்கள், இதழ் பிரிந்த அதிர்வு, மடல் வழி தாவி கண்மணி நுழைகையில் ஒளிரும் கண்களுக்கு சொந்தக்காரி அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



//ஒவ்வொரு வாக்கியம் முடியும் போதும்
புன்னகை செய்வாய் அதுவா அதுவா அதுவா?//

பொங்கிப்பெருகும் மன உலையை அடக்கிக்கொண்டு தன் எழுத்துக்கு வந்தான்.

கி.மு 7 ஆம் நூற்றாண்டில் உரோமானியர்கள் பயன்படுத்திய நாட்காட்டி பத்து மாதங்களை கொண்டதாக இருந்தது. இந்த நாட்காட்டியின் படி வசந்த கால மாற்றங்கள் சரியாக அமையாததால் கி.மு 46 இல் கிரேக்க பேரரசர் ஜூலியஸ் சீசரின் ஆணைப்படி மேலும் இரு மாதங்கள் சேர்க்கப்பட்டு 12 மாதங்கள் கொண்ட புதிய நாட்காட்டி உருவாக்கப்பட்டது. இது ஜூலியன் நாட்காட்டி எனப்பட்டது. தொடர்ந்து 16 நூற்றாண்டுகள் ஐரோப்பா எங்கும் இதுவே பயன்பாட்டில் இருந்தது.

1582 இல் அப்போதைய திருத்தந்தையான பதின்மூன்றாம் கிரகொரியினால் ஜூலியன் நாட்காட்டியில் இருந்த தவறுகள் திருத்தப்பட்டு புதிய நாட்காட்டி உருவாக்கப்பட்டது. அது தான் இன்று பயன்பாட்டில் உள்ள "கிரகோரியன் நாட்காட்டி". இதன்படி, இயேசு பிறந்ததாக கணிக்கப்பட்ட ஆண்டு நாட்காட்டியின் முதலாமாண்டு. இதன் தொடர்ச்சி தான் 2021.

//இரவில் இரவில் கனவில்லையா
கனவும் கனவாய் நினைவில்லையா
அதை சொல்லத்தான் நினைக்கின்றேன்
நான் சொல்லாமல் தவிக்கின்றேன்//

மீண்டும் ஹரிஹரன் இவனை இடையூறு செய்து அவளிடம் அழைத்து சென்றார். இரவுகளில் தூக்கம் தொலைப்பதால் கனவுகள் இல்லை. கனவில் கண்மணியாள் தரிசனமும் இல்லை.

"கோயிலின் வாசலில் உன் செருப்பை தேடுவேன்
கண்டதும் நொடியிலே பக்தன் ஆகுவேன்"

இப்படியாக அவளுக்கு பின்னால் திரிந்து கொஞ்சமாய் நெருங்கி போதுமாய் அலம்பி, தன்னை அவளிடம் கையளிக்க பலவாறாய் முயற்சி செய்தவன். ஆனால் அவளிடம் இன்னும் தன் காதலை சொல்லவில்லை.

//செம்பருத்தி பூவே செம்பருத்தி பூவே
உள்ளம் அள்ளி போனாய் நினைவில்லையா
கண்கள் அறியாமல் கனவுக்குள் வந்தாய்
மனசுக்குள் நுழைந்தாய் நினைவில்லையா//

காதலை தன்னுள் தேக்கி வைத்துக்கொண்டு, அவள் மறுப்பு சொல்லிவிடுவாளோ என்ற பயத்திலேயே அட்ரெனலின் கொப்பளிப்புடனேயே காலத்தை கடத்திக்கொண்டிருந்தவன்.

"சொல்லத்தான் நினைக்கிறேன்
சொல்லாமல் தவிக்கிறேன்
காதல் சுகமானது"

மீட்ட நினைவுகளுக்கு ஒரு பெரு மூச்செறிந்து விட்டு எழுத்தை தொடர்ந்தான்.

கி.மு 638 இல் இரண்டாம் கலிபா உமரினால் இஸ்லாமிய நாட்காட்டி உருவாக்கப்பட்டது. இது ஹிஜ்ரி நாட்காட்டி எனப்படும். வளர்பிறையில் தலைப்பிறையை காண்பதுடன் ஆரம்பித்து அடுத்த தலைப்பிறை வரை ஒரு மாதம். ஒரு மாதம் 29 அல்லது 30 நாட்களை கொண்ட சந்திர நாட்காட்டி ஆகும். முதலாவது மாதம் முஹர்ரம். இறுதி மாதம் துல்ஹஜ். மொத்தம் 12 சந்திர மாதங்களில் 9ஆம் மாதம் ரம்ழானும் 12ஆம் மாதம் ஹஜ் பண்டிகையும் கொண்டாடப்படுகிறது. இந்த நாட்காட்டியின் முதலாவது வருடம் ஹிஜ்ரத். அது நபி மக்காவில் இருந்து மதீனாவிற்கு இடம்பெயர்ந்த ஆண்டு. ஹிஜ்ரத் என்றால் இடம்பெயர்தல்.

எழுதிக்கொண்டிருக்க, வெளியிலிருந்து அம்மா அழைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டேய்! கோவில்ல மருத்துநீர் குடுக்க வெளுக்கிட்டாங்கள். கெதியா போய் வாங்கிக்கொண்டு வா.

அம்மா அழைத்ததோடு மீண்டும் எழுத்தில் கவனம் கலைய ஹரிஹரன் பற்றிக்கொண்டார்.

//பூ என்ன சொல்லுமென்று காற்றறியும்
காற்றென்ன சொல்லுமென்று பூவறியும்
நான் என்ன சொல்ல வந்தேன் நெஞ்சில் என்ன
அள்ளி வந்தேன் ஒரு நெஞ்சம் தான் அறியும்//

நாளை சித்திரை வருடப்பிறப்பு. காலை எழுந்து மருத்து நீர் வைத்து முழுகி கோவிலுக்கு போய் வந்து பின் உறவினர் வீடுகளுக்கு சென்று வந்து கைவிசேடம் வாங்கி, போர்த்தேங்காய் அடித்து, தலையணை சண்டை பிடித்து என்று சிறுவனாய் இருந்த போது இருந்த புதுவருட சந்தோசத்தை நினைத்து பார்த்தான். இன்றோ,

"வலியா சுகமா தெரியவில்லை
சிறகா சிறையா புரியவில்லை"

என்று காதல் தகிப்புடனேயே எழுதிக்கொண்டிருக்கிறான்.

அவளும் இவனது ஒரே ஊர் தான். இருவருக்கும் பல வருட பழக்கம். இவனுக்கோ அது காதலாய் மலர்ந்து பூத்து குலுங்குகிறது. அவள் இன்னும் அதே அண்ணா தான்!

//எண்பது பக்கம் உள்ள புத்தகம் எங்கும்
கவிதை எழுதிய நினைவில்லையா - எழுதும்
கவிதையை எவர் கண்ணும் காணும் முன்பு
கிழித்தது நினைவில்லையா//

இப்படி தன் ஒரு தலை காதலியை நினைத்து கவிதைகள் கிறுக்கியவனிடம், தனது பல்கலைக்கழக சஞ்சிகைக்காக ஒரு கட்டுரை எழுதித்தர கேட்டாள் அவள். அவளுக்காக தான் "நாட்காட்டியின் வரலாறும் புதுவருடப்பிறப்பும்" என்ற இந்த கட்டுரையை இப்பொழுது எழுதுகிறான்.


"ஹப்பி நியூ இயர் ஹப்பி நியூ இயர் வந்ததே
அன்பை சொல்லி ஆசை உள்ளம் துள்ளுதே"

இவன் எழுத்துக்களுக்கு அவள் ரசிகை. அதிலிருந்து தான் அவர்களுக்கு இடையிலான உரையாடலின் ஆரம்பம். அவளுக்கு சொல்ல வேண்டிய தகவல்களை வேறு வேறு பதிவுகளில் சேர்த்துவிடுவான். பின்னர் அதை பற்றி அவளுடன் அளாவுவான். இதுவோ அவளே தனக்காக எழுதக் கேட்டது. எழுதி கொடுத்தால், நீண்டதொரு காதல் அரட்டை காத்திருக்கிறது. அதற்காக தொடர்ந்தான்.

இந்து நாட்காட்டி காலவோட்டத்தில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளானவை. வானியல் அறிஞர்களான ஆரியபட்டா, வராகமிகிரர் வடிவமைத்த பஞ்சாங்கம் என்ற அடிப்படையில் இவை அமைந்தவை. இது பஞ்ச அங்கங்களாக திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கர்ணம் ஆகிய அலகுகளை கொண்டுள்ளது. இது பிரபவ இல் தொடங்கி அட்சய வரையில் 60 வருடங்களை கொண்டது. இந்த அறுபது வருடமும் மீண்டும் மீண்டும் சுழற்சியாக வரும். சூரியன் மீன ராசியில் இருந்து மேச ராசிக்கு செல்வது புதுவருடமாக கொண்டாடப்படுகிறது. இந்த சித்திரைக்கு பிலவ எனும் 35 ஆவது ஆண்டு பிறக்கிறது.

//வானவில் என்ன சொல்ல வந்ததென்று
மேகமே உனக்கென்ன தெரியாதா
அல்லி பூ மலர்ந்தது ஏனென்று
வெண்ணிலவே உனக்கென்ன தெரியாதா//

அவன் அவளுக்காகவே எழுதிக் கொண்டிருந்தாலும் பாடிக்கொண்டிருக்கும் மதுரக்குரலோன், வரிகளினால் அவன் கவனத்தை கலைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



//உன்னை சுற்றி சுற்றி வந்தேன் நினைவில்லையா
என்னை சுத்தமாக மறந்தேன் நினைவில்லையா//

இந்த வரிகள் காதுகுள் இறங்கும் போது எழுதுவதை நிறுத்தி அமைதியாகி ஆனந்த ரசனை கீற்றை கடந்தான். மீண்டும்,



"நித்திரையில் இருக்கும் தமிழா
சித்திரை அல்ல உனக்கு புத்தாண்டு
அண்டிப் பிழைக்க வந்த ஆரியர் கூட்டம் காட்டியதே
அறிவுக்கு ஒவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழருக்கு தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு"

பார்ப்பனியர்களினால் இடைச்செருகப்பட்டதே அறுபது ஆண்டுகள். அதை நிராகரித்து தமிழருக்கு தனி ஆண்டுமுறை வேண்டுமென்று தமிழகத்தில் திராவிட இயக்கங்களின் எழுச்சியின் போது பாரதிதாசன் பாடிய பாடல் இது.

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
தரணியை நீ வெல்லடா"

பார்ப்பனிய எதிர்ப்பின் அடிப்படையில்,1935ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழறிஞர்கள் கூடி ஒரு புதிய முடிவுக்கு வந்தார்கள். தமிழறிஞர் மறைமலையடிகள் தலைமையில் நடந்த கூட்டத்தில் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக் கடைப்பிடிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இது திருவள்ளுவர் ஆண்டு. தமிழக அரசில் இன்றும் நடைமுறையில் இருக்கிறது. கி.மு31 வள்ளுவர் பிறந்த வருடமென கொள்ளப்படுவதால், அதுவே வள்ளுவர் ஆண்டின் முதல் ஆண்டு.

இன்று 2021 + 31 = 2052வது திருவள்ளுவர் ஆண்டு.

"பூமியே சுழல்வதாய் பள்ளிப் பாடம் சொன்னதே இன்று தான் என் மனம் ஏற்றுக்கொண்டது"

காதல் சுழலில் சுற்றிக் கொண்டிருந்தவன், இப்பொழுது காதலிக்காக பூமியும் கோள்களும் சுற்றுவதை கணிக்கும் நாட்காட்டி பற்றி எழுதிக் கொண்டிருக்கிறான்.

புதுவருடத்தில் இவனுக்கும் புதுவாசல்கள் திறக்குமா? அவளுக்கு இவன் எழுத்தின் மேல் இருக்கும் காதல் இவன் மேலாக மாறுமா?

"சித்திரை மாதம் மார்கழி ஆனது
வா நீ வா என் அதிசய பூவே வா
நீ வா நீ வா என் அழகிய தீவே வா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எனக்கு கொரோனாவா ?

தொண்டரடிப்பொடியன்

அவரவர் அலுவல்களை மட்டும் பாருங்கள் என்று தான் அலுவலகம் என்று அதற்கு பெயர் வைத்திருக்க வேண்டும். ஒருநாளாவது அவ்வாறு அலுவலகம் இருக்க வேண்டுமென்று ஒவ்வொருநாளும் ஆசைப்படுபவன் நான். அன்றும் அப்படித்தான். ஆசைப்பட்டுக்கொண்டே அலுவலகம் வந்தேன். வாசலிலேயே என் வாயைப் பிளக்க வைத்துவிட்டான் வாயிலைக் காப்பவன். அவன் தான் செக்கு மாடு போல வாசலையே சுத்தும் செக்கியுரிட்டி.

“சுந்தரமண்ணையின் மகனுக்கு கொரோனாவாம்.”

“என்னையா சொல்றாய்? எப்படி வந்தது? யார் கொடுத்தது?”

மணமாகாதவளின் மகப்பேற்றுக் கதை கேட்பது போல என் கேள்வி இருந்ததை கேட்ட பின்புதான் உணர்ந்து கொண்டேன். என்ன செய்ய? சொல்லி விட்டேனே.. அவனும் கேட்டு விட்டானே.. இனி திரும்ப வாங்க முடியாது. இதை நான் யோசிப்பதற்குள் அவன் அதற்கு பதிலளித்திருந்தான். கொலை, களவு, கற்பழிப்பு போல இவை இப்போது அபத்தமான வார்த்தைகள் அல்ல அன்றாட வார்த்தைகள்.


யாழ்ப்பாண நவீன சந்தையில் பி.சி. ஆர் எடுக்கப்போன கொத்தணியில் தொத்தியிருக்கிறதாம் சுந்தரம் அண்ணையின் மகனுக்கு. அவனை கோப்பாய்க்கு கொண்டு சென்றுவிட்டார்களாம். சுந்தரம் அண்ணையையும் அவரது குடும்பத்தினரையும் தனிமைப்படுத்தி இருக்கிறார்களாம். இன்று அவருக்கு பிசிஆர் எடுப்பார்களாம். பாடமாக்கி அதை ஒப்புவிக்கும் பச்ச பிள்ளை போல செக்யூரிட்டி சொல்லி முடித்தான். இதற்கு முதல் வந்தவர்களுக்கும் அவன் இதுபோல்தான் சொல்லியிருக்க வேண்டும் என்பது அவன் மூச்சு விடாமல் சொல்லி முடித்ததில் தெரிந்தது.

அப்படி என்றால் சுந்தரம் அன்னைக்கு கொரோனோவாக இருந்தால் எங்களையும் தனிமைப்படுத்தி விடுவார்கள் பிறகு எங்களுக்கும் கொரனோவாக இருந்தால்.... அப்பப்பா! நினைக்கவே நெஞ்சு பதைபதைக்கிறது. கடவுளே! தயவுசெய்து சுந்தரம் அன்னைக்கு நெகட்டிவ் ஆக வர வேண்டும். அவருக்கு கோரோனோ இருக்கக்கூடாது.

பார்த்தீர்களா! சுயநலமாக எனக்கு அதை தா இதைத் தா என்று கடவுளிடம் வேண்டியவர்களை அடுத்தவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்ய வைத்துவிட்டது இந்த கொரோனா. எனது நடவடிக்கைகளைப் பார்த்து நானே சிரித்துக் கொண்டேன். எனது அலுவலகத்தை பார்க்க எனக்கே பயமாக இருந்தது. அலுவலக கட்டிட சுவர்களில் எல்லாம் கொரோனா கிருமிகள் நெளிவதாக தெரிந்தது.

கொரோனா வந்து இறந்தவர்களைவிட கொரோனா வந்துவிடுமோ என்கிற பயத்தில் இறந்தவர்கள் தான் அதிகம் போல. மேலதிகாரிகள் சிலர் வயதானவர்கள். இந்த செக்கியுரிட்டி தகவல் சொல்லும் தோரணையிலேயே பலருக்கு இதயத்துடிப்பு நின்றுவிடும். இதை அவனுக்கு விளங்கப்படுத்தி விட்டு எனது அறைக்கு சென்றேன்.

எனது அலுவலக அறை மேல் மாடியிலே உள்ளது. வழமையாக சுந்தரம் அண்ணை கீழே உள்ளவர்கள் எல்லோருக்கும் தேநீர் கொடுத்து விட்டு மேலேயுள்ள எங்களுக்கு தேநீர் கொண்டு வருவதற்குள் அது ஆறிப்போயிருக்கும். ஆனால் சூடு ஆறுவதற்கு முன் குடித்து விடுங்கள் என்று சொல்லி விட்டுப் போவார். நல்ல பண்பான மனிதர்! அவர் கொண்டு வரும் தேநீரில் சூடு அதிகமாக இல்லாவிட்டாலும் சாயம் அதிகமாக இருப்பதால் குடித்து விட முடிகிறது. ஆனால் அதற்குள் கொரோனா கிருமிகளும் இருந்திருக்குமா என்று நினைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுதான் பயமாக இருக்கிறது. அவர் தொட்ட இடங்களிலெல்லாம் கிருமியிருக்கும் என்று இல்லை. ஆனால் அவர் தொட்ட இடங்களை நானும் தொட வேண்டி இருக்கும். அங்கே சிலவேளை கிருமி இருக்கலாம். எனது அறைக்குள் போகவே பயமாக இருக்கிறது. ஆனால் எத்தனை நாளைக்கு நான் விடுமுறை எடுக்க முடியும். இன்று சில அவசரமான வேலைகளும் இருக்கின்றன. நான்தானே அதை செய்து முடிக்க வேண்டும்.

சீனாவில் கொரோனா ஆரம்பமான போது நாங்கள் அதை வெளிநாட்டு செய்தியாக கடந்து சென்றோம் உலகம் முழுவதும் அது மெல்ல மெல்ல பரவத் தொடங்கும் போதும் அது எங்களுக்கு வெளிநாட்டு செய்தி தான் ஆனால் இலங்கைக்குள் முதலாவது தொட்டாலே அடையாளம் காணப்பட்ட போது எங்கள் வீட்டு வாசல் வரை வந்துவிட்டது போல் பதைபதைத்துப் போனோம். அது மெல்ல மெல்ல கொழும்பை சுற்றி பரவத் தொடங்க பயந்து போனோம். பிறகு பழக்கப்பட்டுப் போனோம். யாழ்ப்பாணத்திற்கு வராதவரை உள்நாட்டு செய்தியாகவே அதையும் கடந்து போனோம். யாழ்ப்பாணத்திற்கும் வந்தது. ஆரம்பத்தில் பயந்தோம். இப்போது பழகிவிட்டோம். ஒரு கொரோனா நோயாளி இனங்காணப்பட்ட போதே நாடுகளை முடக்கியவர்கள் நாங்கள். இப்போது எத்தனையோ தொற்றாளிகள்? நாடுகள் முடங்கவில்லை. வீடுகள் மட்டும் முடக்கப்படுகின்றன. ஏனென்றால் ஒட்டு மொத்தமாக முடக்கினால் பல வீடுகளில் அடுப்பெரியாது. நாட்கணக்கில் நிவாரணம் கொடுக்கலாம். மாதக்கணக்கில் எப்படி கொடுப்பது? ஆக அரசுகளுக்கும் வேறு வழி இல்லை. கொரோனாவுடன் வாழப்பழகச் சொன்னார்கள்.

இவ்வாறு என் வேலைகளைப் பார்க்க விடாமல் கொரோனா நினைவுகள் என்னை கட்டிப்போட்டதை நினைத்த போது நேரம் மதியத்தை தாண்டியிருந்து. விரைவாக மதிய உணவை முடித்துவிட்டு என் வேலைகளை பார்க்கத் தொடங்கினேன். சில கடதாசிகளில் நான் கையெழுத்துப் போட வேண்டியிருந்தது. அந்த கடதாசிகளை கொண்டுவந்தவர்களுக்கு கொரோனா இருந்திருந்தால் , அந்த கிருமிகள் காகிதத்தில் இன்னும் உயிரோடிருந்தால்... கதாசிரியரின் கற்பனைகளும் தோற்குமளவுக்கு என் கற்பனைகள் சிறகடித்துப் பறந்தன. எல்லா கடதாசிகளுக்கும் சனிடைசர் அடிக்க முடியுமா? எல்லாவற்றிலும் கையெழுத்துப் போட்டதும் விரைவாக என் கைகளுக்கு சனிடைசர் போட முடியும். அதுவரை என் கைகளை என் முகத்தில் வைத்துவிடக் கூடாது. அவ்வாறு நினைத்த போதுதான் என் மூக்கும் கடிப்பதாகப் பட்டது. சொறிய முடியவில்லை. என் கைகளுக்கு மனதால் விலங்கிட்டேன்.



கொரோனா சிந்தனைகளே கடிகார முள்ளை இயக்கியதால் நேரம் போனதே தெரியவில்லை. நாளை அலுவலகம் வருவது உறுதியில்லாத காரணத்தினால் தேவையான கோப்புகளை கொண்டு செல்ல யோசித்தேன். கோப்புக்களில் கொரோனா குடி கொண்டிருந்தால் நிலைமை விபரீதமாகி விடுமென்பதால் தவிர்த்தேன். மடிக்கணினியை மட்டும் மடக்கி வைத்துக்கொண்டு வீட்டிற்கு புறப்பட்டேன்.

சகல உடைமைகளையும் வீட்டிற்கு வெளியிலேயே களைந்து விட்டு கிணற்றில் மோட்டரைப் போட்டு நன்றாக தோய்ந்து விட்டு எல்லா உடைமைகளுக்கும் சனிடைசர் அபிசேகம் செய்து விட்டு வீட்டிற்குள் சென்றேன். வயதான பெற்றோர். வயதுக்கே உரிய சில நோய்கள். வீட்டிற்குள்ளேயே இருக்கும் அவர்களுக்கு கொரோனாவை நான் கொடுத்துவிடக்கூடாதென்பதில் உறுதியாக இருந்தேன்.

ஏதாவது கிருமிகள் தொண்டையில் இருந்தால் எரிந்து போகட்டுமென்று சுடச்சுட சுடுநீர் குடித்துக்கொண்டிருந்தேன். அப்போதுதான் அலுவலக நிர்வாகியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அழைப்புக்கள் அதிர்ச்சி தரலாம். ஆனால் எல்லா அதிர்ச்சிகளும் துன்பத்தை தருவதில்லை.

***காத்திருங்கள்...***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்து : நாம எங்க வீரத்த காட்டுவம்?**
**திரைப்படம் : சக்ர**
**எழுதியவர் : M. S. ஆனந்தன்**

மித்ரசகி

# திரைத்தமிழ்

(பாதுகாவலரை அந்நிறுவன ஊழியர் ஒருவர் ஏசி தள்ளி விழுத்துகின்றார். இச்சம்பவத்தை இன்னொரு பக்கமாக நின்று தனது காதலியுடன் உரையாடிக்கொண்டிருந்த விஷால் பார்த்து ஊழியரை நோக்கி செல்கின்றார்.)

**விஷால்** : டேய்.. வாடா..

**ஊழியர்** : சேர்.. யார் சேர் நீங்க? ஆ... என் Status என்னனு தெரியுமா? சொல்ல சொல்ல கேட்காம.. கையெடுங்க சேர். நான் யாருனு தெரியுமா?

**விஷால்** : வாடா (ஊழியர் கன்னத்தில் அறைகிறார்.)

**ஊழியர்** : என்ன சேர் அடிச்சிட்டீங்க.

**விஷால்** : அந்த பேப்பர எடடா.

**ஊழியர்** : சேர்....

**விஷால்** : எடுடானா... (மீளவும் ஊழியர் கன்னத்தில் அறைகிறார்.)

(ஊழியர் பேப்பரை எடுக்கிறார்)
**ஊழியர்** : சேர்.

**விஷால்** : உள்ள இருக்கிற எல்லா முக்கியமான Headingsஉம் படிடா. (ஊழியர் பக்கத்தை புரட்டுகிறார். விஷால் தடித்த குரலில்) படிடா

**ஊழியர்** : ஓகஸ்ட்15 கொலை சம்பவத்தில் எந்தவொரு துப்பும் கிடைக்காததால் பொலிஸ் திணறல்.

**விஷால்** : அடுத்து.

**ஊழியர்** : இந்தியர்களால் சுவிஸ் பாங்கில் பதுக்கப்பட்ட 900கோடி ரூபா கறுப்பு பணத்தை மீட்போம் என பாரத பிரதமர் உறுதி.

**விஷால்** : நடந்திச்சா?

**ஊழியர்** : நடக்கல சேர்.

**விஷால்** : அடுத்து.

**ஊழியர்** : வங்கி கடனை அரசு இரத்து செய்யாததால் காவிரி டெல்டா பகுதியில் விவசாயிகள் பூச்சி மருந்து குடித்து தற்கொலை. தொடரும் அவலம்.

**விஷால்** : நடக்குதெல்லோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊழியர்** : சேர். தொடர்ந்து நடக்குது சேர்.

**விஷால்** : ம்.....

**ஊழியர்** : புதிய சாலைத்திட்டத்துக்காக பல்லாயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் ஆக்கிரமிப்பு. சொந்த நிலங்களிலிருந்து மக்கள் விரட்டியடிப்பு.

**விஷால்** : நீ ஆம்பிளையா இருந்தா... உனக்கு உண்மையிலேயே தைரியம் இருந்தா... இப்ப அந்த வயசானவருக்கு காட்டினியே அதே கோபத்தையும் வீரத்தையும் இதில இருக்கிற எதாச்சொரு விசயத்தில காட்ட முடியுமாடா? துணிச்சல் இருக்கா? (மீளவும் ஊழியர் கன்னத்தில் அறைகிறார்.)

**ஊழியர்** : சேர்.

**விஷால்** : டேய். நீ அதை தட்டி கூட கேட்க வேண்டாம்டா. ஏதிர்த்து சத்தமா எல்லாருக்கும் கேட்கிற மாதிரி உன்னால ஒரு கேள்வி கேட்க முடியுமாடா? சொல்றா? முடியாது. ஏனுனா திருப்பி அடிப்பாங்க எல்லோ.


நாம எங்க வீரத்த காட்டுவம்?
செருப்பு தைக்கிறவன் ஒரு ஐஞ்சு ரூபா சேர்த்து கேட்பான். அங்க தான் நாம வீரத்த காட்டுவம். Septic-tank Clean பண்றவன் ஒரு 50 ரூபா கூட கேட்பான். அங்க தான் நமக்கு கோபம் வரும். இல்லை?

50 வயசு தாண்டிய பெரியவர் 24 மணிநேரமும் ATM Securityயா இருக்காரு அவரோட கஸ்ரம் என்னனு யோசிக்க வேணாம். முடிஞ்ச வரைக்கும் அவர காயப்படுத்தாம ஒதுங்கி போகலாம்.

நாங்க எங்க ஏறி மிதிக்கனுமோ? அங்க இறங்கிடுறம். நாங்க எங்க இரக்கப்படனுமோ? அங்க தான் ஏறி மிதிப்போம்.
ATMக்குள்ள Helmet போட்டு போறதே தவறுனு தெரியாத .....

**ஊழியர்** : சேர். மன்னிச்சிருங்க சேர்..

# எரிந்தவன் இன்றும் வாழ்கிறான். எரித்தவன் எங்கே?



**அறிவியலை மறுத்து மதம் கோலோச்சியிருந்த காலத்தில் சூரியனை மையமாக வைத்தே பூமி சுற்றுகிறது.. பூமி சுற்றுவதால்தான் இரவு பகல் ஏற்படுகிறது. என்ற உண்மையை சொன்னதற்காக ஜியார்டானோ புருனே உயிருடன் எரிக்கப்படுகிறார்.**

**உத்தரவிட்டவர்களின் பெயர் வரலாற்றின் குப்பை தொட்டியில் கூட இல்லை...!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திராங்கதா 23

காவ்யமோகன்

## அடங்காப்பற்று

வடக்கே யாழ்ப்பாண இராச்சியத்திற்கோ தெற்கே அனுராதபுர அரசுக்கோ கீழ்க்கரைக் கடலுக்கோ மேல் வானுக்கோ பின் வந்த பறங்கிக்கோ என்று எதற்கும் யாருக்கும் அஞ்சாமல் அடங்காமல் அடிபணியாமல் “அடங்காப்பற்று” என்கிற கர்வப்பெயர் கொண்டு கம்பீரமாய் நிமிர்ந்து நின்றிருந்தது அன்றைய வன்னியர் தேசம்.

வன்னி எனும் சொல் நெருப்பு எனும் பொருள் கொண்டே தமிழிலக்கியத்தில் பயின்று வரப்படுகிறது. அக்கினி குலத்தவர்களே வன்னியர்களும் வன்னிச்சியர்களும் ஆவர் என்று கதைகள் பலவாறாக கூறப்படுகிறது.

வன்னியர் ஈழத்தில் குடியேறியது பற்றி ஈழத்து நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் செய்திகள் உள்ளன.

> “சாலிவாகான சகாப்தம் (358) ஆம் வருசத்திலே (கிபி 436) மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்ட மகாராசன் யாத்திரையின் பொருட்டு இலங்கைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புதுப்பித்தான். பின்னர் ஆலய பணிவிடைகளுக்கும், கோணேசர் லிங்கத்திற்குப் பூசை செய்வதற்கும் ஏற்பாட்டு நிதிக்காய் ஏழு நாடுகளையும், தோப்புக்களையும் ஏற்படுத்தி அவைகளில் பயிரிட்டு வருமானம் செலுத்துமாறும் வன்னியர்களை அழைத்துக் குடியமர்த்தினான். இவர்களின் பரம்பரையினரே வன்னியர் ஆகினர்” (யாழ்ப்பாண வைபவமாலை, கோணேசர் கல்வெட்டு).

இக்கதை வன்னியரின் முதலாம் குடியேற்றத்தினை குறிப்பதாய் நாம் கொள்ளுதல் பொருந்தும்.

வையாபாடல் வன்னியர் குடியேற்றம் பற்றிய வேறொரு கதையினை எடுத்துரைக்கிறது. அது ஈழவேந்தன் செயதுங்க வீரவராராச சிங்கன் காலத்தில் நிகழ்ந்த கதை.

யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மணிமுடி வேந்தன் முதலாம் சிங்கையாரிய சக்கரவர்த்தியையே கைலாசமாலை செயவீரன் என்கிற புனைபெயரில் குறிப்பிடுவதைக் கருதுங்கால் செயதுங்க வீர வரராசசிங்கன் என்று வையாபாடல் வர்ணிப்பதும் சிங்கையாரியச் சக்கரவர்த்தியையே என நாம் கொள்ளமுடியும்.

செயதுங்க வீரனுக்கு மதுரை மன்னன் மகள் சாமதுதியை மணஞ்செய்ய விருப்பம் தோன்றியது. தன் எண்ணத்தை தூதுவர் மூலம் மதுரை மன்னனுக்கு அனுப்பி வைத்தான் அரசன். மதுரை வேந்தன் தன் மகளுடன் அறுபது வாட்படை வன்னியர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். தான் மணம்முடிக்க இராசகுமாரியை அழைத்து வந்த வன்னியரை அழைத்து அடங்காப்பற்றிற்கு சென்று அதனைக்கைப்பற்றி ஆட்சி புரியுமாறும் யாழ்ப்பாண இராசதானிக்கு ஆண்டுதோறும் திறை செலுத்துமாறும் அரசன் பணித்தான்.

அவ்வாறே அடங்காப்பற்று வன்னியர் தேசமாக மாறியது. ஆண்டு தோறும் யாழ்ப்பாண இராசதானிக்கு பெறுமதிமிக்க செல்வங்களை வன்னிமன்னர்கள் திறையாக செலுத்திக்கொண்டிருந்தனர். காலப்போக்கில் அவ்வரி செலுத்தும் நாளே பெருவிழாவாக உருமாறியது. வன்னியர் எல்லோரும் கூடி யாழ் அரசவையில் அவ்விழாவை சிறப்பிப்பர். வன்னியர் விழா என்கிற பெருங்கொண்டாட்டமாய் அது நிகழும்.

வன்னியர் விழாவை இப்போது அவசரமாக நிகழ்த்தியாக வேண்டும் என மந்திரி ஏகாம்பரம் தொண்டமனார் சங்கிலிய மகாராஜாக்கு ஆலோசனை வழங்கினார்.

“பறங்கியனை நோக்கி தாக்குதல் தொடங்க முன் எம்மண்ணிலே முளைத்த சில களைகளை அவசரமாக அகற்றியாக வேண்டும். அவ்வாறே இப்போது மிக்கபிள்ளை சிறையில் இருந்தாலும் இன்னொரு களையையும் நாம் உடனடியாக அகற்ற வேண்டிய தேவை இருக்கிறது. வன்னிமன்னன் வன்னியத்தேவனின் நிலைப்பாட்டை உணர்ந்து கொள்ள இப்போதே வன்னியர் விழாவை நடத்தியாக வேண்டும்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிற மந்திரியாரின் வார்த்தைகளை சங்கிலியன் முழுவதுமாய் ஏற்றுக்கொண்டு வன்னியர் விழாக்கான உத்தரவை வெளியிட்டான்.

யாழ்ப்பாண இராச்சியத்திற்கு கீழ் வன்னி இராச்சியம் வலுப்பெற்ற வேந்தர்கள் எத்தனையோ பேரினால் பெருஞ்சிறப்பு பெற்றிருந்தாலும் காலத்திற்குக் காலம் சில விதிவிலக்கான வேந்தர்களும் வந்து மறைந்துள்ளனர். அத்தகைய ஒருவனே நம் கதைக்காலத்தில் இருந்த வன்னியத்தேவன்.

“காக்கை வன்னியன்” என வரலாற்றாசிரியர்கள் கடுமையாக சாடும் இவனை கதைநாகரீக மரியாதை கருதி வன்னியத்தேவன் என்கிற பெயரில் நாம் வழங்குகிறோம்.

காகம் அப்படியென்ன பாவம் செய்த பறவையோ தெரியவில்லை. துரோகத்திற்கும் அதுவே அடையாளம். அசுத்தத்திற்கும் அதுவே அடையாளம். இரைச்சலிற்கும் அதுவே அடையாளம். ஏன்? அபசகுனத்திற்குக்கு கூட அதுதான் அடையாளம். வானில் பறக்கும் காக்கையின் நிழலை தரையில் காண்பது மனதில் தோன்றியுள்ள ஏதோ அச்சம் அவ்வாறே பலிக்கும் என சகுனம் சொல்வதாய் அக்காலத்தில் மக்களிடைய ஒரு உறுதியான நம்பிக்கை இருந்து வந்தது பற்றி போர்த்துக்கேய குவேரஸ் பாதிரியார் கூட தன்நூலில் வியந்து எழுதியுள்ளார்.

நாட்டிய கூடத்தில் அரங்கேற்றத்திற்கு ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்த சித்திராங்கதாவிற்கு அவ்வாறானதொரு தரிசனம் கிடைத்தது. வானில் பறந்த காக்கையொன்றின் நிழலை அறியாது பார்த்துவிட்டாள். பதறி விட்டாள்.

நளினம் தடுமாறி தரையில் விழுந்தாள்.

எழுந்து தந்தையைத் தேடி ஓடினாள்.
“அப்பா..அப்பா...”

“என்ன மகளே? என்ன நேர்ந்தது? ஏன் இப்படித் தடுமாறி ஓடி வருகிறாய்?”

“அப்பா வானில் எங்கோ பறந்து போன காக்கையொன்றின் நிழலை என் கண்களால் கண்டுவிட்டேன். காக்கையைக் காணவில்லை.



திவாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி என்ன நேருமோ என்றெண்ணும் போது எனக்கு உள்ளம் நடுங்குகிறது அப்பா. என் மனதில் தோன்றிய அச்சங்களும் சந்தேகங்களும் உண்மை ஆகிவிடும் போலவே எனக்குத் தோன்றுகிறது.”

“தைரியமாக இரு சித்திராங்கதா, அப்படி ஏதும் நிகழ்ந்துவிடாது. நல்லவற்றை மட்டும் நாட்டவல்ல அன்னை வீரமாகாளியின் அருள் உன்னுடன் இருக்கும் வரை நீ ஏன் பயங்கொள்கிறாய் மகளே. என் மகள் சித்திராங்கதா எவ்வளவு தைரியமானவள் தெரியுமா? இப்படி வீண் அச்சம் கொள்வது ஏனம்மா?”

“தெரியவில்லை அப்பா, என் உள்ளம் சங்கடமாகவே இருக்கிறது.
அப்பா, எனக்கு இப்போதே வீரமாகாளி கோயிலுக்குப் போகவேண்டும் போல் இருக்கிறது. இல்லாது என் மனம் நிம்மதியடையாது.”

“சரி மகளே , வா, நாம் இதோ இப்போதே நல்லைக்குப் புறப்படுவோம். உடனே புறப்படு மகளே”

சித்திராங்கதாவின் உள்ளத்தில் அந்த அபசகுன சம்பவம் எத்தனை பூகம்பங்களை உண்டுபண்ணியது என்பதை உங்களால் உணரமுடிகிறதா?

தன் வாழ்க்கையையே கலைக்காய் அர்ப்பணித்தவள் அவள். அபிநயங்களே வாழ்வின் நயம் என்று வாழ்பவள். அவள் அரங்கேற்றம் தடைப்பட்டுவிடுமோ என்கிற மெல்லிய அச்சமும் தவிப்பும் அதிகரித்துக் கொண்டே செல்லும் போது இப்படியானதொரு சிறிய அபசகுனச் சம்பவம் அவள் உள்ளத்தை எப்படி உருக்குலைய வைக்கும் என்பதை அவளைப்போன்றே கலைமீது தீராக்காதல் - அடங்காப்பற்று கொண்டவர்களாலே உணர முடியும்.

*காத்திருங்கள்...*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர் 02
## மடங்குகளை மடக்கு




சினமிகா

| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 |

துமி அன்பர்களே! உங்கள் உதவியுடன் வேதாளத்திற்கு விக்ரமாதித்தன் சரியான பதிலை அளிக்க வேதாளம் கட்டவிழ்த்துச் சென்று மீண்டும் முருங்கைமரம் ஏறியது. ஞானசீல முனிவருக்கு அளித்த வாக்கை காப்பாற்றத் துடிக்கும் விக்ரமதித்தனோ மீண்டும் சுடுகாட்டில் இருக்கும் முருங்கை மரத்தடிக்கு விரைந்து சென்று தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த வேதாளத்தைப் பிடித்துக் கட்டி சுமந்துவருகிறான்.

வேதாளாம் விக்ரமாதித்தனிடம் “என்னை மீண்டும் மீண்டும் சுமந்து களைத்துப் போயிருப்பாய். இந்த மர நிழலில் சற்று ஓய்வெடுத்து விட்டு பயணத்தைத் தொடருவோம்.” என்றது.

இருவரும் ஓய்வெடுக்க மர நிழலில் அமர்ந்தார்கள். தந்திரம் மிக்க வேதாளமோ தரையில் ஏதோ சதுரம் போல் கிறுக்கியபடி விக்ரமாதிதத்தனே, எழுந்திரு உமக்கொரு வேலை தருகிறேன் என்று ஆரம்பித்தது.

1-9 வரையான இலக்கங்களை இவ்வாறாக மூன்று நிரைகளில் நீர் ஒழுங்குபடுத்த வேண்டும் எவ்வாறெனில், முதலாவது நிரையில் உள்ள மூவிலக்கத் தொடரின் இருமடங்காக இரண்டாவது நிரையில் உள்ள மூவிலக்கத் தொடரும், மூன்று மடங்காக மூன்றாவது நிரையில் உள்ள மூவிலக்கத் தொடரும் அமைதல் வேண்டும். அத்துடன் ஒரு இலக்கம் ஒருமுறை மட்டுமே இடம்பெற வேண்டும்.

நீர் இதை தீர்க்கும் வரை நான் சற்று ஓய்வெடுக்கிறேன் எனக் கூறிய வேதாளம் ஓய்வெடுக்கத் தொடங்கியது. அன்பர்களே, மீண்டும் உங்களது உதவி விக்ரமாதித்தனுக்குத் தேவைப்படுகிறது. சரியான பதிலை துமி மின்னிதழிற்கு அனுப்பி விக்ரமாதித்தனுக்கு உதவுங்கள்.

## புதிர் 01 – நான்கு மூன்றுகள் – விடைகள்

(3/3) – (3/3) = 0

(3/3) + (3-3) = 1

(3/3) +(3/3) = 2

∛(3 X 3 X 3 ) = 3

(3+(3 X 3))/3 = 4

3 + 3 – (3/3) = 5

3 + ((3 X 3)/3) = 6

3 + 3 + (3/3) = 7

(3 X 3) – (3/3) = 8

(3 X 3) – (3 - 3) = 9

(3 X 3) + (3/3) = 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் தரமிழத்தலில் செல்வாக்கு செலுத்தும் சமூகக் காரணிகள்

அதிரன்

சூழலின் வளங்கள் எனக் குறிப்பிடப்படும் நீர், காற்று, நிலம், தாவரம் போன்றவற்றின் இயல்பு நிலையில் ஏற்படுத்தப்படுகின்ற சிதைவு சூழல் தரமிழத்தல் எனப்படுகின்றது. உலகில் மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து எப்போது மனிதன் சூழலை மாற்றியமைக்க விரும்பினானோ அன்றிலிருந்தே சூழலின் பல்வேறு மாற்றங்களுக்கு முகங்கொடுக்கத் தொடங்கியது. அந்தவகையில் சூழல் தரமிழத்தலில் முக்கியமாக பின்வரும் விடயங்கள் பாதிப்பதன் மூலம் சூழல் தரமிழத்தல் ஏற்படுகின்றது.

வளிமாசடைதல், ஓசோன்படை தேய்வடைதல், காலநிலை மாற்றம், திண்மக்கழிவுப் பிரச்சினைகள், நீர்மாசடைதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் சூழல் தரமிழப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. சூழல் தரமிழத்தலில் செல்வாக்குச் செலுத்துகின்ற சமூக பொருளாதாரக் காரணிகளாக சனத்தொகை அதிகரிப்பு, நகராக்கம். வறுமை, சமயச்சடங்குகள், விழாக்கள், நவீனவாழ்க்கை முறை, விழாக்கள், கண்காட்சிகள் போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

சூழல் தரமிழப்பில் செல்வாக்குச் செலுத்துவதில் சனத்தொகைக்கும் பாரிய பங்களிப்பு உள்ளது. சனத்தொகை என்பது உண்மையிலே அபிவிருத்தி மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானதொரு வளமாக இருக்கின்ற அதேவேளை, மற்றொரு பக்கத்தில் குறிப்பிட்ட அளவை விட அதிகரிக்கின்றபோது, அது சூழல் தரமிழப்பில் செல்வாக்குச் செலுத்துகின்ற மிகப்பெரும் மூலமாகவும் காணப்படுகின்றது. சூழலின் வளங்கள் வரையறைக்குட்பட்டவையாகக் காணப்படுகின்றன. ஆனால் சனத்தொகை அபரிதமான வளாச்சியை அடைகின்றபோது குறிப்பிட்ட சூழல் தொகுதியினால் தாங்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. தாங்க முடியாத நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சூழல் தரமிழத்தலிற்கு உள்ளாக்கப்படுகின்றது.

சனத்தொகை அதிகரிப்பானது இயற்கை வளங்களின் பாவணை, அடிப்படைத் தேவை உற்பத்தி ஆகியவற்றினால் உயிரினப் பலவகைமை இழப்பு, காற்று மற்றும் நீர் தரமிழத்தல் மற்றும் வரட்சியான நிலங்களின் மீதான அழுத்தம் போன்ற பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது.

சூழல் சமநிலையானது சனத்தொகை வளர்ச்சி அல்லது அதிகரிப்புடன் தொடர்புபட்டுள்ளது. ஏனெனில் சனத்தொகை வளர்ச்சியானது பல்வேறு தேவைகளை வேண்டி நிற்கின்றது. சனத்தொகை வளர்ச்சியானது முக்கியமானதொரு விடயமாக இருக்கின்றது. குறிப்பாக ஒரு பிரதேசத்திலுள்ள வளங்களின் உற்பத்தி, பரம்பல், மற்றும் பயன்பெறுதல் ஆகியவற்றுடன் தங்கியுள்ளது.

ஒரு பிரதேசத்தில் காணப்படும் சராசரியான சனத்தொகையினால் அதிகளவில் சூழல் தரமிழப்பதில்லை. மாறாக அதிகரித்த சனத்தொகை காணப்படுகின்றபோது அங்குள்ள ஒவ்வொரு நபருக்கும் வசிப்பதற்கான இடம், உணவுத் தேவை, வைத்தியசாலை, கல்வியகங்கள் என்பவற்றை வேண்டி நிற்கின்றது. இத்தகைய நிலைமைகள் சூழலிலேயே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நவீனவாழ்க்கை முறை காரணமாகவும் சூழல் தரமிழத்தலுக்கு உள்ளாகின்றது. பல இளைஞாகள் இன்று நவீனத்துவமான வாழ்க்கை முறையினையே பெரிதும் விரும்புகின்றனர். பாதியளவிலான ஒலிபெருக்கி சாதனங்களைப் பயன்படுத்தல், பொருத்தமான நவீன ஆடைகள், வேகமான தனிநபர் வாகனங்கள் போன்றவற்றின் பாவரனையினையை விரும்புகின்ற போக்கு காணப்படுகின்றது. அத்துடன் இன்று தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீடுகளில் சமைத்து சாப்பிடுவதை விடுத்து துரித உணவிற்காக உணவு விடுதிகளை நாடுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இதனால் உணவகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

உணவகங்களை அதிகளவில் அமைப்பதற்காக இயற்கையான இடங்கள் மாற்றியமைக்கப்படுவதுடன், அதிகளவில் மரங்கள் அழிக்கப்படுவதுடன், இயற்கை வளங்களும் அழிக்கப்படுகின்றன. அத்துடன் உணவகங்கள் மூலம் வெளியேற்றப்படும் கழிவுகள் நீர் மாசடைவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நவீன வாழ்க்கை முறைகளில் இன்று பொருட்களை எளியமுறையில் கொள்வனவு செய்து கொண்டு செல்வதற்கு அதிகளவில் பிளாஸ்டிக்கால் உருவாக்கப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. உணவு பொதியிடல், மென்பாணங்கள் போன்றவற்றிற்கு இன்று பிளாஸ்டிக்காலான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய நிலையில் இவை சூழலில் விடப்படுகின்றபோது திண்மக்கழிவு தொடர்பான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன.

விழாக்களும் சூழல் தரமிழத்தலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்தியாவிலே விழாக்களுக்குப் பெயர்போன இடமாக பஞ்சாப் பிரதேசம் விளங்குகின்றது. இங்கு விழாக்கள்



ஜனவரி மாதத்தில் தொடங்கி டிசம்பர் மாதத்தில் நிறைவு பெறுகின்றது. அதாவது வருடம் முழுவதும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பஞ்சாப்பின் முதல் பண்டிகையாக போகி பண்டிகை முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இது தொடங்குவதற்கு முதல் சில நாட்களுக்கு முன்னரே இளைஞர்கள் குழுக்களாக தமது இருப்பிடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குப் போகி பண்டிகையுடன் தொடர்புபட்ட பாடல்களுடன் சென்று, தேவையற்ற குப்பை கூழங்களை அழிப்பதற்காக எரிபொருள் மற்றும் பணத்தினை சேகரிப்பார்கள். இந்த விசேட கொண்டாட்டமானது தீயூட்டுவதற்கான விசேட வாய்ப்பினை வழங்குகின்றது.

மேலும் தீபாவளி போன்ற பண்டிகைகளின் போது பட்டாசுகள் கொழுத்தி கொண்டாடுகின்றனர். பட்டாசுகள் உடலுக்குள் சுவாசத்தின் போது சென்று சேர்வதனால் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், குறிப்பிட்ட வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வபாயுக்களையும் சேர்க்கின்றது.

வறுமையும் சூழல் தரமிழத்தலில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு காரணியாகக் காணப்படுகின்றது. இலங்கை மற்றும் ஆபிரிக்க நாடுகளில் காடுகள் பெருமளவில் அழிக்கப்படுதற்கு வறுமை முக்கியமான காரணியாக அமைகின்றது. ஆபிரிக்க நாடுகளில் நகரப்பகுதிகளில் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை, வீடுகளை அமைப்பதற்கு வசதியின்மை போன்ற காரணிகளால் காடுகள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் அதிகளவில் வெள்ளப்பெருக்குகள் ஏற்படுவதற்கு பெரியளவில் நிகழ்கின்ற காடழிப்பும் முக்கிய காரணியாகக் குறிப்பிடப்படுகின்றது. அதேபோன்று பெரும்பாலானவாகள் காடுகளை அழித்து அதிலே தமது விவசாய நடவடிக்கைகளைச் சட்டவிரோதமாகச் செய்வதற்கும் வறுமையே முக்கியமான காரணியாகக் காணப்படுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் இன்று முருகைகக்கற்பாறை அகழ்தல் சில இடங்களில் நடைபெறுவதற்கு வறுமையே காரணம். குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் வறிய மக்களினால் முருகைக்கற்பாறை அகழ்வு தொழிலாக இடம்பெறுகின்றது. இவை இலங்கையின் கல்குடா, திருகோணமலை போன்ற பகுதிகளில் அதிகளவில் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் கடற்கரைச் சூழல் அதிகளவில் மாசடைந்து வருகின்றது.


நகராக்கம் சூழல் தரமிழத்தலில் செல்வாக்குச் செலுத்துகின்ற இன்னுமொரு காரணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரப்பகுதியில் ஏற்படும் கவர்ச்சி காரணமாக நகரங்களின் சனத்தொகை அதிகரித்து நகரங்கள் கிராமப் பகுதியை நோக்கி விஸ்தரித்துச் செல்லுதலை குறித்து நிற்கின்றது. நகரப்பகுதிகளின் அபரிதமான வளர்ச்சியினால் சூழல் மிகவும் மோசமான நிலைக்கு மாற்றமடைந்து செல்கின்றது. குறிப்பாக நீர் மாசடைதல், வளிமாசடைதல், நிலம்மாசடைதல் போன்ற சூழல் தரமிழத்தல் இங்கு நடைபெற வழிவகுக்கின்றது. குறிப்பாக ஆசிய ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்தவரையில் வளர்முக நாடுகளில் இந்த நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. நகரப்பகுதியின் வெளியேறும் கழிவகளினால் நீர்நிலைகள் மிகவும் மோசமான நிலையை அடைகின்றன. குறிப்பாக வளர்முக நாடுகளில் ஏற்படும் இத்தகைய மோசமான நிலைகளினால் அவற்றை அண்டிய குடிநீர் பெறும் வழிமுறைகள் மிகவும் மோசமாகப் பாதிப்படைகின்றன.

எனவே சிந்திக்கத் தெரிந்த விலங்கான மனிதன் தனது செயற்பாடுகளைத் திட்டமிட்டு சூழல் மீத தாக்கமற்ற வகையில் முன்னெடுத்துச் செல்வதனால் எதிர்கால சந்ததிக்கு ஏற்ற வகையில் நிலைத்திருக்கத்தக்க வளமானதொரு சூழலை வழங்க முடியும் என்பதில் ஐயமில்லை.

# காற்றுக்கு பேர் என்ன?



நகம் அற்று இருப்பது
நர்த்தகி நயனம்
நீள் பிறை காண
நினைவுக்குள் அலை பேசும்
காற்றுக்கு பேர் என்ன
கனவுக்குள் வேர் எதுவோ
சொல் அற்று சூழ் நிகழும்
காட்டோடு நிற்க ஓட பறக்க
யாருக்கும் பட்டாம் பூச்சி ஆசை தான்
பாழ் கிணற்றுக்குள் பேரோசை
சுழன்று அகண்டு இருள் தேடும்
நிலவுக்குள் தலை நீட்டும் என் நிறை
பெரும்பாறை பூத்து விட்ட
பெரு வெடிப்பு நகரும்
உராயும் நீர்க்குமிழிக்குள்
சொல்லணாத் துயரம்
முடிவற்ற பத்திக்குள் தான்
மூச்சடக்கி நடக்கிறேன்
கண்டவர் புன்னகை செய்யுங்கள்
காணாதோர்க்கு சமர்ப்பணம்....!



கவிஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கில மொழியும் சேக்ஸ்பியரும்...

எம்.ஆர். றிப்அத் முகம்மது,

வருடந்தோறும் ஏப்பிரல் மாதம் 23 ஆந் திகதி ஆங்கில மொழி தினமாகவும் சேக்ஸ்பியர் தினமாகவும் கொண்டாடப்படுகின்றது. ஆங்கில இலக்கியத்துக்கு மகத்தான தொண்டாற்றிய சேக்ஸ்பியர் இத்தினத்திலேயே பிறந்தார் என்றும் மறைந்தார் என்றும் நம்பப்படுகின்றது. தமிழிலே வள்ளுவர் நாள், பாரதி நாள் என்று நாம் பிரத்தியேகமாக எமது பெருந்தகைகளை நினைவு கூர்வது போன்று ஆங்கிலம் கூறும் நல்லுலகில் சேக்ஸ்பியர் என்றென்றும் முடிசூடா மன்னனாக இருந்து வருபவர். அவரது இலக்கியத்தின் சிறு துளியையாவது பருகாமல் ஆங்கிலம் கற்பவர்கள் அரிது. எனவே தான் ஆங்கில மொழி தினம் அவரது நினைவு தினமாகவும், அவரது நினைவு தினம் ஆங்கில மொழி தினமாகவும் ஒருங்கே அமைந்துள்ளன.

முதன்முதலாக ஆங்கில மொழி தினம் 2010 ஆம் ஆண்டு ஏப்பிரல் 23 ஆந் திகதி கொண்டாடப்பட்டது. ஆங்கில மொழியின் வரலாறு, பண்பாடு, இலக்கியம், சாதனைகள் போன்றவற்றை எடுத்துச் சொல்லும் நாளாகவே இது அமைகின்றது. தாய்மொழிக்கு அடுத்து உலகெங்கும் கற்கப்படும் முதன்மை மொழியாக ஆங்கிலம் காணப்படுவதாலும் உலக தொடர்பாடல் மொழியாக விளங்குவதாலும் இம்மொழி தற்கால உலகப் பொது மொழியாக (Lingua franca) கொள்ளப்படுகின்றது. உலகெங்குமுள்ள பல் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட அனைத்து மக்களையும் ஆங்கில மொழியே பெருமளவில் ஒன்றிணைக்கின்றது. எனவேதான், ஐ.நா சபை 2010 இல் இத்தினத்தைப் பிரகடனப்படுத்தியது. மேலும் ஆங்கில மொழி எமது வாழ்வில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, ஆகிய நாடுகளிலேயே ஆங்கிலம் முதல் மொழியாக இருக்கின்ற போதிலும் உலகில் 60 க்கும் மேற்பட்ட நாடுகளில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் தொடர்பாடல் மொழியாகவும் அமைந்துள்ளதுடன் உலகின் மிக முக்கிய வலையமைப்பாகவும் ஆங்கிலம் மாறியுள்ளது. சீனாவில் வழங்கும் மந்தரின் மொழி, ஸ்பானிய மொழி போன்றவற்றை அடுத்து ஆங்கிலம் உலகின் மூன்றாவது பெரும் பொது வழக்கு மொழியாக உள்ளது. ஐரோப்பாவின் பல நாடுகளிலும் பொது நலவாய நாடுகள் பலவற்றிலும் ஐ. நா விலும் உலகின் பல்வேறு அமைப்புகளிலும் ஆங்கிலம் உத்தியோகபூர்வ மொழியாக இருப்பதுடன் இரண்டாம் மொழியாகவும் பரந்தளவில் கற்கப்படுகின்றது.

## ஆங்கில மொழியின் பின்புலம் :

1400 வருட காலம் பழைமை வாய்ந்த மொழியான ஆங்கிலம் அதே கால வரலாற்றைக் கொண்ட காத்திரமான இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஜெர்மனிய மொழியிலிருந்தே ஆங்கில மொழி பிறந்ததாக அறியப்படுகின்றது. பிரித்தானிய காலனித்துவம் உலகெங்கும் வேரூன்றும் வரையில் ஆங்கில மொழியின் செல்வாக்கு மிகக் குறைவாகவே இருந்து வந்தது. மேற்கு ஐரோப்பாவின் ஒரு சில தீவுகளிலும் அவற்றின் சிறு சிறு பகுதிகளிலுமே அது செல்வாக்குப் பெற்றிருந்தது. மத்தியகால இங்கிலாந்தில் ஆங்கில மொழியின் தோற்றுவாயாக இருந்தவர்கள் ஏங்கிள் எனப்படும் மேற்கு ஜெர்மனியக் குடிகள். பால்டிக் கடலின் ஒரு பகுதியாகிய ஏங்கிலிய தீபகற்பத்திலிருந்து இங்கிலாந்தை நோக்கிப் புலம் பெயர்ந்தவர்களே இவர்கள். அவர்கள் மூலமே ஆங்கிலம் தோற்றம் பெற்று அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணம், ஒலியமைப்பு, சொற்கள் போன்றனவும் உருவாகின. மொத்தத்தில் ஆங்கிலம் என்னும் மொழி அதனுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு மொழியினடியாகவே எழுந்தது.

ஆங்கில மொழி காலனித்துவ மாற்றத்தின் பின்பே உலகத்தின் கல்வி மொழியாகவும் நிருவாக மொழியாகவும் பொருளியல் மொழியாகவும் மருத்துவ மொழியாகவும் மாற்றமுற்றது. மேலைத்தேய மருத்துவம் முதன்மை பெற்றதுடன் ஆங்கிலம் உச்சத்தை எட்டியது. இணைய வலைத் தளங்களின் தோற்றத்துடன் உருவான தொழில்நுட்ப முன்னேற்றம், ஆங்கிலத்தின் செல்வாக்கு மேலோங்குவதற்கு மேலும் வலுச்சேர்த்தது.

## சேக்ஸ்பியரின் தொண்டு :

ஆங்கில இலக்கியத்தில் மாபெரும் மேதாவியாகவும் உலகின் மிகப்பெரும் நாடகாசிரியர்களுள் ஒருவராகவும் வில்லியம் சேக்ஸ்பியர் போற்றப்படுகின்றார். ஸ்ராட்போர்டு ஆவன் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்த அவர் "ஆவனூர் பாணன்" (Bard of Avon) என்று பிரபலமாக அழைக்கப்பட்டார். இவரது பிறந்த தினம் எது என்பது சம்பந்தமாகக் கருத்து வேறுபாடு உண்டு. அவர் 1564 ஆம் ஆண்டு ஏப்பிரல் 26 அன்று திருமுழுக்குப் பெற்றுள்ளதாகவும் ஏப்பிரல் 23 ஆம் நாளில் பிறந்ததாகவும் அவரது இறப்பும் ஏப்பிரல் 23 ஆம் நாளிலேயே நிகழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. உலகம் முழுவதிலுமுள்ள சேக்ஸ்பியரின் நேசர்களும் ஆர்வலர்களும் இவ்விலக்கிய மேதையைக் கௌரவிக்குமுகமாக ஒவ்வொரு வருடமும் ஏப்பிரல் மாதம் 23ஆந் திகதியை சேக்ஸ்பியர் தினமாகக் கொண்டாடுகின்றனர்.



மொத்தமாக அவர் முப்பத்தாறு நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஹம்லெற் **(Hamlet)**, மக்பெத் **(Macbeth)**, ரோமியோ யூலியற் **(Romeo and Juliet)**, ஒதெல்லோ **(Othello)**, யூலியஸ் சீசர் **(Julius Caesar)** போன்றவை மிகவும் பிரசித்தி வாய்ந்தன. யூலியஸ் சீசர் நாடகத்தில் வரும் **'Et tu> Brute?** - நீயுமா புரூட்டஸ்!?" அல்லது "புரூட்டஸ்! நீயுமா?" என்ற ஏக்கம் உலகம் முழுவதிலுமுள்ள அனைவரும் அறிந்த ஒன்று. துரோகிகளைக் குறிப்பதற்கு அனைவராலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கவிதைத் துறையிலும் சேக்ஸ்பியர் கைதேர்ந்த வல்லாளர். அவரது கவிதைகளுள் "வீனஸும் அடொனிஸும்" **(Venus and Adonis)** என்ற கவிதை மிகவும் பிரசித்தி வாய்ந்தது. செய்யுள் இலக்கியத்திலும் சேக்ஸ்பியர் தடம்பதித்துள்ளார். அவரின் 154 செய்யுட்களைக் கொண்ட ஏடு ஒன்று 1609 இல் வெளியிடப்பட்டது.

சேக்ஸ்பியர் ஆங்கில மொழிக்கு சுமார் 3000 சொற்களை அறிமுகம் செய்துள்ளார். அவரது சொற்கையாட்சியை மதிப்பிடுகையில் 17,000 முதல் 29,000 வரை கணிக்க முடியும். 3000 சொற்களை ஆங்கில மொழிக்கு அறிமுகம் செய்துள்ளமை குறித்து ஒக்ஸ்போர்டு அகராதி அவரை ஏற்றிப்போற்றியுள்ளது.

சேக்ஸ்பியரின் நாடகங்களில் 13 தடவைகள் தற்கொலை இடம்பெறுகின்றது. 13 என்பது அவப்பேறுடைய இலக்கமாகக் கொள்ளப்படுகின்றது. அவரின் நாடகங்களில் தற்கொலையுண்டோரின் எண்ணிக்கையும் பதின்மூன்று. அதிலே ரோமியோ யூலியற் எல்லோராலும் அறியப்பட்டவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்ஸ்பியரின் மிகக் குறுகிய நாடகம் “கொமடி ஒவ் எரர்ஸ் (The Comedy of Errors)”. இது 1787 வரிகளையும் 14,369 சொற்களையும் கொண்டது. அவரின் மிக நீண்ட நாடகம் “ஹம்லெற் (Hamlet)”. இது 4,042 வரிகளையும் 29,551 சொற்களையும் கொண்டது.

1613 ஆம் ஆண்டளவில், 49 ஆம் வயதில் தனது ஊரான ஸ்ராட்போர்டுக்குத் திரும்பிய சேக்ஸ்பியர் தனது பணிகளிலிருந்து இளைப்பாறினார். அங்கு மூன்று வருடங்கள் வாழ்ந்து 1616 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23 ஆந் திகதி தனது 52 ஆவது வயதில் காலஞ்சென்றார். சேக்ஸ்பியரின் தனிப்பட்ட வாழ்வு குறித்த பதிவுகள் மிகக் குறைவாகவே உள்ளன.

சேக்ஸ்பியரின் கல்லறையில் ஒரு சாபம் பொறிக்கப்பட்டுள்ளது. அது அவரின் பூதவுடலை அப்புறப்படுத்துவோருக்கு ஒரு எச்சரிக்கை விடுக்கின்றது. அது குறிப்பிடுவது யாதெனில்,

“அருமை நண்பரே! யேசுவுக்காகப் பொறுத்தருள்வீர்! இங்கு புதையுண்டிருக்கும் உடலை அகற்றாதீர் இக்கல்லறையை விட்டுவைப்போர் அருள் படைத்தோர் ஆகுக! என் உடலை நகர்த்துவோர் சபிக்கப்படுவோர் ஆகுக!”

**'Good friend for Jesus’ sake forbear, To dig the dust enclosed here: Blest be the man that spares these stones> And curst be he that moves my bones!".**

## ஆங்கில மொழி கற்றலும் மொழிபெயர்ப்பும் :

இன்று உலகில் அதிகளவிலான மக்கள் கற்கும் மொழியாக ஆங்கிலம் உள்ளது. அதிலும் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்பவர்களே உலகெங்கும் உள்ளனர். இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (Teaching English as a Second Language),




வேற்று மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (Teaching English as a Foreign Language) என்று தனிப்பெரும் துறைகளே நிறுவப்பட்டும் உள்ளன. இதற்கென்று தனிக் கற்கைகளும் பட்டப் படிப்புகளும் கூட வழங்கப்படுகின்றன. இதற்கான பிரதான காரணம் இன்றைய நவீன கல்விக்கு ஆங்கில மொழி மூல மொழியாக உள்ளமையே. சிறுபராயத்தில் தாய் மொழியில் ஆரம்பக் கல்வியைப் பயின்றாலும் உயர் கல்வியை ஆங்கில வழிக் கல்வியாகவே பெற வேண்டிய சூழலும் எதிர்கால தொழில் வாய்ப்புகளை ஆங்கில மொழியைக் கொண்டே அடையவேண்டிய நிலைமையும் இன்று உள்ளது. அதற்காக சிறுபராயம் முதற்கொண்டே ஆங்கில மொழியறிவை மாணவர்களுக்கு இலகு முறையில் ஊட்ட வேண்டும். ஆங்கிலம் கற்பிக்கும் ஆசான்கள் அம்மொழியைத் தேடியறிந்து கற்கும் ஆர்வம் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டும்.

இன்று அறிவியல் சார்ந்த கருத்துகளும், நூல்களும், செய்திகளும், தகவல்களும் ஆங்கில மொழியிலேயே சொரிந்து கிடக்கின்றன. அன்றாடம் உலகில் நடைபெறும் நிகழ்வுகள், செய்திகள் போன்றவை உடனுக்குடன் இணைய வழியாக ஆங்கிலத்திலேயே நம்மை வந்தடைகின்றன. அவற்றை எல்லா மக்களும் அறியும் வண்ணம் கொண்டு சேர்ப்பது மொழிபெயர்ப்பு ஆகும். அத்தகைய பயனுள்ள விடயங்களைத் தேடியறிந்து எளிய நடையில் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தை அறிந்தவர்கள் ஆற்றவேண்டிய தொண்டாகும். மிக முக்கியமாக கல்வி கற்போர் பயன் பெறத்தக்க நல்ல நூல்களையும் சமூக விழிப்புணர்வைத் தூண்டி மக்களை நல்வழிப்படுத்தும் அறக்கருத்துகளையும் நன்னெறிகளையும் மொழிபெயர்ப்புச் செய்வது மிகுந்த நன்மை பயக்கும் விடயமாகும்.

ஆங்கில மொழி தினத்தை எவ்வாறு கொண்டாடலாம் :
ஆங்கில மொழி தினத்தைக் கொண்டாடுவது உலகில் பல்வேறு விதமாக நடைபெறுகின்றது. நூல் வாசிப்பு, கவிதை மன்றுகள், பாடசாலைப் போட்டிகள் என்றவாறெல்லாம் உலகெங்கும் ஒரு விழிப்புணர்வுக்காக நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அதே நேரம் சிலருக்கு இந்த நாள் அவர்களது இலக்கியப் பங்களிப்புகள் மூலம் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த நாளிலேயே உலக நூல் தினமும் பதிப்புரிமை தினமும் ஒருங்கே அமைந்திருப்பது மேலும் நயக்கத்தக்கது.

இருப்பினும், ஆங்கில மொழியின் தன்மையில் அது இயல்பாகவே கொண்டுள்ள சிக்கல்கள் பலரை அம்மொழியை அறிவதிலிருந்து தூரமாக்கியுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது ஆங்கிலத்தில் உச்சரிப்பில் ஒன்றித்து இருக்கும் பல சொற்கள் பொருளில் வேறுபடும். **'Their', 'There', 'They're'** போன்ற சொற்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். ஒருமை, பன்மைச் சொற்களிலும் வேறுபட்ட தன்மை உண்டு. பல பெயர்ச் சொற்களுக்கு இறுதியில் **'s'** என்ற எழுத்து வந்தால் பன்மை வடிவம் பெறப்படுகின்ற போதிலும் சில சொற்கள் வேறுபட்டு நிற்கின்றன. **'Goose'** என்ற சொல்லின் பன்மை வடிவம் **'Geese'** என்று வழங்கப்படுவதையும் **'Moose'** என்ற சொல் பன்மையிலும் **'Moose'** என்றே வழங்கப்படுவதையும் காணலாம். இவ்வாறான பேதங்கள் பல உள்ளன, ஆனால் முறையாக ஆங்கிலத்தைக் கற்பதுடன் வாசிப்பிலும் செவிமடுப்பிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தால் அத்தகைய பேதங்களை இலகுவில் நுண்மையாக அறிந்து மொழியைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். ஆங்கிலம் இலகுவாகக் கற்றறியக்கூடிய ஒரு மொழி. எல்லாவற்றுக்கும் மேலாக, ஆங்கிலத்தை இரசனையுடன் கற்பவர்கள் அம்மொழியின் இயல்புக்கு இசைவடைந்து அதனை ஒரு இன்பமாகவே அனுபவிப்பர். காலப்போக்கில் ஆங்கிலத்தின் செல்வாக்கு அவர்களுக்குள் மேலோங்கி, எந்த விடயத்தையும் குறித்து இலகுவான முறையில் ஆங்கிலத்தில் தொடர்பாடலாம் என்னும் மனோநிலைக்கு அவர்களை அது மாற்றிவிடுகின்றது. அத்தகையதொரு ஈர்ப்பை அம்மொழி தன்னகத்தே கொண்டுள்ளது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. ஆங்கில மொழி தினம் அம்மொழியின் வரலாற்றையும் அம்மொழியின் வாழ்வையும் அம்மொழியின் தனித்துவமான தன்மையையுமே பறைசாற்றி நிற்கின்றது.

ஆங்கில மொழி தினத்தில் அதன் பல்வகைமையையும் அறிந்து கொள்வோம். ஆங்கில மொழியில் கூட வழக்கொழிந்த சொற்கள் என்றும் பிரயோகங்கள் என்றும் பல உள்ளன. அவற்றைப் பழைய ஆங்கில இலக்கியங்களில் காணலாம். அதே போல ஆங்கில மொழியிலும் கிளை மொழி வேறுபாடுண்டு. கனடிய ஆங்கிலம் என்றும் ஐக்கிய இராச்சிய ஆங்கிலம் என்றும் அமெரிக்க ஆங்கிலம் என்றும் ஸ்கொட் ஆங்கிலம் என்றும் அவற்றுக்கிடையே நுண்ணிய வழக்கு வேறுபாடுகள் உண்டு, உபயோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளும் உண்டு. அவற்றை இன்று பல்லூடகங்கள் வழியாக நாம் காணலாம்.

ஆங்கில மொழியின் புதியன ஏற்றல் கொள்கையும் புதிய சொற்களை அறிமுகப்படுத்தும் அல்லது தழுவும் தன்மையும் வேறெந்த மொழியும் கொண்டிராத விசேட அம்சமாகும். இதுவே இன்று ஆங்கில மொழி பரந்து விரிந்து உலகெங்கும் நிலை கொள்ளக் காரணமாகவும் அமைந்துள்ளது. கொவிட்-19 கொள்ளை நோய் பரவியதை அடுத்து ஒக்ஸ்போர்டு அகராதி 110 இற்கும் மேற்பட்ட புதிய சொற்களைப் புதிதாகப் புகுத்தியுள்ளமையை இதற்குத் தக்க சான்றாகக் கொள்ளலாம். வாழும் மொழி ஒன்று என்னென்ன அம்சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு இன்று மிகுந்த முன்னுதாரணமாகத் திகழும் முதன்மை மொழி ஆங்கில மொழியே.

ஆங்கில மொழி இனிமேலும் தனது சுய அடையாளத்தில் நின்று நிலைக்காது என்று தர்க்கிப்போர், அம்மொழி எல்லா மொழிகளையும் தழுவக் கூடியது என்பதையும், அம்மொழியை எல்லா மொழிகளும் தழுவும் என்பதையும் இன்று ஆங்கிலம் தன்னகத்தே கொண்டுள்ள தொடர்புகளை வைத்து ஒரு கணம் ஏற்றுத்தான் ஆக வேண்டியுள்ளது.

"நாம் சில சந்தர்ப்பங்களில் வெறுமனே (ஆங்கில மொழியில்) சொற்களை இரவல்பெறுவதில்லை ஆங்கிலம் ஏனைய மொழிகளை இடைவிடாது அடியொற்றிச் சென்று அம்மொழிகளையே திணறடித்து புதிய சொல்வளத்தை அபகரித்து எமக்குக் கொடுத்துள்ளது".

-ஜேம்ஸ் நிக்கொல்-

'We don't just borrow words; on occasion, English has pursued other languages down alleyways to beat them unconscious and rifle their pockets for new vocabulary".

-James Nicoll-

# கடவுளின் கரங்கள்



தனிமையும் அச்சமும் தான் கொரோனா தரும் மிகப்பெரும் தீமைகள். அவற்றுக்கு மருந்திட முயற்சித்துள்ளார் ஒரு செவிலியர். பிரேசிலில் தற்போது கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், கொரோனா நோயாளிகளின் அச்சத்தைப் போக்கும் நோக்கில் கையுறைகளில் (Gloves) சுடு தண்ணீரை நிரப்பி கைகளில் கட்டிவிடுகிறார் செவிலியர் ஒருவர்!

ஆதரவாய் ஒரு கையிருந்தால் நம்பிக்கை தானாய் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னூட்டல் பொறிமுறை (feedback)

T.K. மதி




வழுக்கியாற்று வடிநிலப்பகுதியில் வெள்ளத்தை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பமானது முழுத் தொகுதியையும் இயக்கும் பிரதான மூலமாக திகழ்வதுடன் கட்டுப்படுத்தி மேலாளுகை செய்வதாகவும் அமைகின்றது.

பிரதேசத்தில் வெள்ள அளவானது அதிகரிக்கும் பொழுது வெள்ளநீர்க் கதவுகள் திறக்கப்படுகின்றது இதனால் வெள்ளநீர் அடுத்த பகுதிக்கு செல்வதனால் உயர்ந்த பகுதியில் உள்ள வெள்ளமானது குறைக்கப்படுகின்றது. இதனால் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்கள் தொகை குறைவடைகின்றது ஆனால் வெள்ள நீர்மட்டத்தை உயர் அளவில் பேணுவதன் மூலம் நிலத்தடி நீர் கொள்ளும் தன்மை மற்றும் குளங்களில் நீர் தங்கும் கால அளவு என்பன அதிகரிக்கும். இதன் மூலம் நெற் செய்கையின் அளவு அதிகரிப்பதுடன் கோடைகால மரக்கறி செய்கை பரப்பளவும் அதிகரிக்கின்றது. இதனால் பயிர் நிலங்களின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதனால் விளைச்சலின் அளவும் அதிகரிக்கின்றது. அத்துடன் இயற்கை தாவர மற்றும் விலங்குகளின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கின்றது.

குளங்களில் நீர்கொள்ளும் திறன் அதிகரிப்பதனால் குளம் வற்ற எடுக்கும் கால அளவும் அதிகரிக்கும் இதனால் குளங்களில் மாரிகாலங்களில் இனப்பெருக்கம் மூலம்



உருவாகும் மீன் குஞ்சுகள் வளர்வதற்கான கால அவகாசம் கிடைக்கின்றது இதனால் மீன் பிடிப்பவர்கள் பெறும் மீன் விளைச்சலின் அளவும் அதிகரிக்கின்றது இதனால் அவர்கள் பெறும் வருமானத்தின் அளவும் அதிகரிக்கின்றது.



விவசாய உற்பதி அதிகரித்து விளைச்சல் அதிகரிப்பதனால் விவசாயிகளின் வருமானமும் அதிகரிக்கின்றது அத்துடன் விவசாய நிலங்களில் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்புக்கள் கிடைப்பதனால் அவர்களின் வாழ்வாதாரமும் மேம்பாடடைகின்றது.

வெள்ள நீரின் அளவு குறைவடையும் போது மேற்குறித்த இயக்கங்கள் பின்னோக்கியதாக நகர்வதினால் ஒட்டுமெத்தமாக வடிநிலப்பகுதியின் உற்பத்தித்திறன் குறைவடைகின்றது இதன் மூலமாக விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிப்படைகின்றது. ஆனால் வெள்ளநீரை தேக்கும் அளவை அதிகரிப்பதனால் வெள்ள நீரால் ஏற்படும் அனர்த்தத்தினால் பாதிப்படையும் மக்கள் தொகையும் அதிகரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய காலத்தில் பெரும்பாலான மக்கள் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் வேலைவாய்ப்புக்களை அதிகம் நாடுவதனால் வழமையான சூழல் இயக்கத் தொடர்பானது தகர்வுப்பாதையை எதிர் நோக்கி உள்ளது.

## வழுக்கியாறு சமூக சூழல் தொகுதியின் நீண்டகால நிலைப்படுத்துகை (sustainability)

### நீர்ப்பாசனத் தொழில்நுட்பம்

நீண்ட நீர்ப்பாசனக்கால்வாய் அமைப்புக்கள் குளங்களுடன் இணைக்கப்பட்டிருப்பதனால் குளங்களில் உள்ள நீரை நீண்ட தூரங்களுக்கு எடுத்துச்செல்ல முடிவதுடன் "சீலாப்பட்டை" என்ற பனை ஓலையால் இழைக்கப்பட்ட கூடை போன்ற அமைப்பு கால்வாயில் ஓடும் நீரை வயல் நிலங்களுக்குப்பாச்ச ஏறக்குறைய 1970 க்கு முன்னர் பயன் பட்டது. சீலாப்பட்டையின் இரு அந்தங்களையும் இருவர் பிடித்து நீரை அள்ளி இறைத்தனர்.

அத்துடன் கிணறுகளில் இருந்து நீரை மேலுயர்த்தவென துலா மற்றும் சூத்திரம் என்பன



பயன் படுத்தப்பட்டன. இதில் துலா என்பது மனித வலு மூலமும் சூத்திரம் எருது மாடுகளின் வலுவினாலும் இயக்கப்பட்டன. துலாவானது பனை மரத்தினால் செய்யப்பட்டிருக்கும் எளிய நெம்பு வகையை சார்ந்த ஒரு பொறி ஆகும். விவசாய கிணறுகளில் பொருத்தப்பட்டு இருந்த துலாவானது வீட்டுப்பாவனை கிணறுகளில் பொருத்தப்பட்டிருக்கும் துலாவை விட அளவில் பெரியதாகவும் அதனை இயக்க இரண்டு மனித வலுவும் தேவைப்பட்டது. ஒருவர் ஆடுமரத்தின் மீது நிற்பார் அவர் துலா மிதிப்பவர். மற்றயவர் கயிற்றுடன் இணைக்கப்பட்ட பட்டையால் நீர் அள்ளுபவர் இவர் கொடி பிடிப்பவர் எனப்பட்டார். பட்டை எனப்படுவது சீலாப்பட்டையை அமைப்பில் ஒத்த அளவில் சிறிய அமைப்பாகும்.



சூத்திரம் எனப்படுவது துலாவை விட மேம்படுத்தப்பட்ட பற்சில்லு மற்றும் சங்கிலிகளால் அமைக்கப்பட்ட ஒரு சிக்கலான பொறியாகும். இதில் தனி வாளிச் சூத்திரம், பல வாளிச் சூத்திம் என இரண்டு வகை உண்டு.

1950 க்கு பிற்பட்ட காலத்தில் ஐதரோ காபன் எண்ணெய்களில் இயங்கும் நீர்ப்பம்பிகளின் வருகையைத் தொடர்ந்து சூத்திரம் மற்றும் துலா என்பவற்றின் பாவனை குறைவடையத்தொடங்கி இன்று காண்பதற்கரிதாகி விட்டது. இன்றைய காலங்களில் மின்சார நீர்ப்பம்பிகள் பரவலாக பாவனையில் உள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

(ஆறு ஓடும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





த.விதுர்ஷன்.
மாணவன் ,
கொழும்பு பல்கலைக்கழகம்.

எமது தாயகப்பகுதிகளை எடுத்து நோக்கினால் மிக அழகிய,தொன்மையான சுற்றுலாத்தளங்கள் காணப்படுகின்றன. நாட்டில் நிலவிய துரதிஷ்ட சூழ்நிலைகளால் ஏனைய மாகாணங்களை போன்று சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்த துறையாக இந்நூற்றாண்டின் ஆரம்பகாலங்களில் பிரகாசிக்காவிட்டாலும், தற்போது எழுச்சியடைந்து வரும் துறையாக சுற்றுலாத்துறை தாயகப்பகுதிகளில் காணப்படுகின்றது. ஏறத்தாள 150க்கு மேற்பட்ட சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனங்கள் வடபகுதியில் இயங்குகின்றன. “எபெக்ஸ்” போன்ற பல நிறுவனரீதியான சுற்றுலா மேம்பாட்டு வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.




வடமாகாணத்தை பொறுத்தவரையில் அடையாளப்படுத்தப் படாதமலேயே பல்வேறு சுற்றுலாத்தளங்கள் காணப்படுகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அண்மையில் சமூக வலைத்தளங்களின் ஊடாக பிரபலமாக பேசப்பட்டு பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகளை தன்னகத்தே வரவழைத்த இல்வாரையை குறிப்பிடலாம்.இவ்வாறாக இன்னும் பல்வேறு சுற்றுலா சிறப்பு மிக்க இடங்கள் அடையாளப்படுத்தப் படாமல் காணப்படுகின்றன. அவற்றை நாம் இனங்கண்டு, அழகுபடுத்தி , அவற்றை சுற்றுலா மையங்களாக அறிமுகம் செய்வதனூடாக எம்பகுதிகளில் சுற்றுலாச்சந்தை வாய்ப்பினை மேம்படுத்த முடியும். வட




மாகாணத்திற்கு வெளிநாடுகளிலிருந்தும், ஈழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்ற போதிலும், இவர்களால் அதிகம் பயணப்பட்டு பார்க்கப்படும் இடங்களாக மிகச்சில வரையறுக்கப்பட்ட இடங்களே காணப்படுகின்றன.

இவ்வாறான தோற்றப்பாடு நிலவுவதனால் தாயகப்பகுதி சாரந்து சுற்றுலாத்துறையின் அடுத்த கட்டம் என்பது வினாக்குறியாக தொக்கி நிற்கின்ற சூழ்நிலை காணப்படுகிறது. வட பகுதியை நோக்கி வரும் சுற்றுலாப்பயணிகள் பொது நூலகம், யாழ் கோட்டை, சில ஆலயங்கள், கடற்கரைகள் என்பவற்றுடன் தமது சுற்றலாவை நிறைவுறுத்தி கொள்கின்றனர். எமது பகுதிகளில் சுற்றுலாப்பயணிகளை கவருவதற்கென பல பெறுமதியான காடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக முல்லைதீவு மாவட்டத்தில் குருந்தூர்மலை, கயட்டைகாடு போன்றவற்றை குறிப்பிட முடியும். இவ்வாறான காடுகள் பல வேண்டத்தகாத செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்ற சூழ்நிலையில், நாம் இவற்றை சுற்றுலாத்தளமாக வடிவமைத்து எமது தொன்மை, பெருமைகளை ஊரறியச்செய்வதோடு, வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கும், எமது பெருவளங்களாகிய காடுகளின் இருப்பை பாதுகாப்பதற்கும் வழிசமைக்க முடியும்.மேலும் வட மாகாணத்தில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை பார்ப்பதற்கும், மன்னர்களினுடைய இராசதானிகளை பார்ப்பதற்குமென என மக்கள் வெளி மாகாணங்களக்கு சென்று வருகின்றனர். அதே சமயத்தில் வடக்கில் குருந்தூர்மலை என்று ஒன்று உள்ளதையும் அதன் மேல் எமது ஆதி சிவன் ஆலயம் மற்றும் பண்டைய தமிழ் மன்னர்களின் இராசதானி உள்ளதையும் அறிவதற்குரிய வாய்ப்புகள்,அவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.இதே போல் கயட்டைப்பகுதியில் ஈழத்தின் எந்தக்காடுகளிலும் இல்லாத வித்தியாசமான அரியவகை மரங்கள் காணப்படுகின்றன. இவற்றை நாம் அடையாளப்படுத்தி ஆவணப்படுத்தி விளம்பரப்படுத்துவதன் ஊடாக பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

வடமாகாணத்தில் பல்வேறு பதிகம் பெற்ற, வரலாற்று தொன்மை கொண்ட ஆலயங்கள் காணப்படுகின்றன.அவை தன்னகத்தே பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டு விளங்குகின்றன. திரும்பும் திசையெல்லாம் ஆலய கோபரங்களால் ஆசிர்வதிக்கப்படும் அளவுக்கு பேறு வாயக்கப்பெற்ற பூமியில் வாழ்வமைந்த நாம் அவற்றை போற்றி காக்க வேண்டியது காலத்தேவை என்றாகிறது.இவ்வாறான ஆலயங்களுக்கு ஒரு சில எடுத்துக்காட்டாக நாற்புறமும் கடல்சூழ நின்று அருள்பாலிக்கும் நயினை நாகபூசனி அம்மன் ஆலயம், ஈழத்து சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயில், நகுலேஸ்வரம், செல்வச்சந்நிதி, வற்றாப்பளை அம்மன் ஆலயம் எனப் பல்வேறு ஆலயங்களை குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன்,சங்கிலியனினுடைய வீடு, யமுனா ஏரி போன்ற நாம் பாதுகாத்து மெருகூட்ட வேண்டிய இடங்கள் இன்று எம்மவர்களாலேயே கையறு நிலையில் இருப்பது வருந்தத்தக்கதாகும். அதே போல் எமது தரைப்பகுதியின் பெருமளவான கரையோரங்கள் கடற்பட்டிகையினால் சூழப்பட்டுள்ளது. கசூரினா கடற்கரை,சாட்டி கடற்கரை, கோவளம் கடற்கரை, மணற்காடு கடற்கரை, தொண்டைமானாறு கடற்கரை, காங்கேசன்துறை கடற்கரை, தலையாட்டி கடற்கரை போன்ற பல கடற்கரைகள் சுற்றலத்தளங்களாக செயற்படும் இயல்தகவு கொண்டு காணப்படுகின்றன.

மன்னாரை எடுத்துக்கொண்டால் பெரிய மடு ஆலயம், யோதாவாவி, வெளிச்ச வீடு, தலைமன்னார் கடற்கரை, ஒல்லாந்தர் கோட்டை போன்ற பல்வேறு சுற்றுலாத்தளங்கள் காணப்படுகின்றன. இன்று வரை ஆழம் அறிய முடியவில்லை எனக்குறிப்பிடப்படும் நிலாவரைக்கிணறு தன்னகத்தே பல்வேறு ஆச்சரியங்களை தக்க வைத்து காணப்படுகின்றது. வட பகுதியின் எழில் கொஞ்சும் சப்த தீவுகள் காணப்படுகின்றன. சிறப்பாக நெடுந்தீவினை எடுத்துக்கொண்டால் ஒரு முழுநாளை சுற்றுலாப்பயணிகள் அங்கே செலவிடக்கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்தளமாக காணப்படுகின்றது. ஏறத்தாள ஒரு மணித்தியாலங்களுக்கு அதிகளவான நேரம் கடலின் ஊடாக பயணம் செய்து அந்த தீவினை அடைய வேண்டும். நெடுந்தீவானது இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரைகளும், முருகைக்கற் வேலிகளும், அங்குமிங்கும்,ஓடித்திரியும் குதிரைகளும்,முயல்களும், வியாபித்து விரிந்த நிற்கும் பெருக்குமரமும், ஆதாம் கால்தடமும், புறாக்கூடும் ஒல்லாந்த கோட்டையுமென பல்வேறு சிறப்பான தளங்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. சுற்றுலாப்பயணிகள் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பகற் பொழுதில் இடங்களை பார்வையிட்டு இராப்பொழுதையும் அங்கே கழிப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றன. ஆனாலும் சுற்றலாப்பயணிகளின் வருகைக்கு ஏற்றாற்போல் வீதிப்புனரைப்பு மேம்படுத்தப்படாமலும்,உள்ளூர் பௌதீக கட்டமைப்புகள் மேம்படுத்தப்படாமலும் காணப்படுகின்றமை உரிய தரப்பு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். அங்கே வருகைதருகின்ற சுற்றுலாப்பயணிகளில் பெரும்பாலானோர் போக்குவரத்து ஒழுங்கமைப்பு குறித்து தமது வருத்தங்களை பதிவு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. உரிய நேர இடைவெளிகளில் படகு சேவைகள் இடம்பெறாமை, சேவையில் ஈடுபடுகின்ற படகுகளும் அடிக்கடி பழுதடைதல் போன்ற இடர்பாடுகள் காணப்படுகின்றன.

எமது தாயகத்தின் சுற்றுலாச்சந்தையின் கணிசமானபகுதியை கைப்பற்றவல்ல நெடுந்தீவு சுற்றுலாத்தளமானது தகுந்த வகையில் பரிபாலிக்கப்பட்டு மேம்படுத்தபடுமிடத்து பல்வேறு அனுகூலங்களை பிரதேசம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் பெற்றுக்கொள்ள முடியும். நெடுந்தீவுப்பகுதியில் பெருமளவான மக்கள் மீன்பிடி,விவசாயம் ஆகிய துறைகளிலேயே தங்கியிருக்கின்றனர். விவசாயத்தை அடிப்படையாக கொண்டு வாழும் மக்களுக்கு மழைவீழ்ச்சி பாரிய சவாலாக அமைகின்றது. வருடாந்த மழைவீழ்ச்சி என்பதே மிக சொற்ப அளவில் கிடைக்கப்பெறுவதனால் நீர்ப்பற்றாக்குறை காரணமாக உரியவாறு விவசாயம் மேற்கொள்ள முடியாத நிலமை



காணப்படுகின்றது.இதனால் பல விவசாய குடிமக்கள் விவசாயத்தினை கைவிடுகின்ற நிலையில் உள்ளனர் அத்தோடு குடிநீர் கூட கடல்நீர் நன்னீராக்கல் திட்டத்தினூடாகவே பெற்றுக்கொள்கின்றனர். ஏறத்தாள ஓர் தன்னிறைவு அடைய வேண்டிய தீவு தத்தளித்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அப்பகுதியில் சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவதன் ஊடாக உள்ளூர்வாசிகளின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் உயர்த்த முடியும். அதே போல் நயினாதீவு, அனலை தீவு போன்றனவும் சிறந்த சுற்றுலா மையங்களாக காணப்படக்கூடிய பிரதேசங்களாகும்.

மிகச்செழிப்பான தீவாக காணப்படக்கூடிய அனலைதீவு சுற்றுலாவக்கு சிறந்த தளமாக காணப்படுகின்ற போதிலும் உட்கட்டமைப்பு அடிப்படை வசதிகள் மேம்படுத்த வேண்டிய தேவைப்பாடு பாரிய அளவில் காணப்படுகின்றது. அனலைதீவுக்கு செல்லும் சுற்றுலாப்பயணிகள் குறைபட்டுக்கொள்ளும் விடயம் அங்கு ஒரேயொரு உணவகமே காணப்படுகின்றது,அங்கும் முற்கூட்டியே பதிவு செய்வதன் மூலமே உணவை பெற்றுக்கொள்ளலாம் என்பதாகும்.இவ்வாறான இடர்பாடுகள் நெடுந்தீவிலும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வாறான சுற்றுலா வாய்ப்புகளை கொண்ட தீவுகளை அபிவிருத்தி செய்து அழகுபடுத்துவதோடு, அங்கு செல்வதற்குரிய படகு வசதிகள், போக்குவரத்து வசதிகள், தீவை சுற்றிப்பார்ப்பதற்கான ஒழுங்கமைப்புகள், உணவகங்கள், கழிப்பிடங்கள், தங்குமிட வசதிகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாகவே எமது சுற்றுலாத்தளங்களும் வெவ்வேறு இடங்களில் விளம்பரப்படுத்தப்படும். அதன் மூலமாகவே சுற்றுலாப்பயணிகளின் வருகையையும் குறித்த பகுதிகளும் அதிகரிக்க முடியும்.

**ஆராய்வோம்.........**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 03 பெண்களும் உளவியல் முரண்பாடுகளும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

புயல் பெ. சிறீகந்தநேசன்,
மாங்குளம்

பொதுவாக உளநெருக்கீடுகள் என்று வருகின்றபோது, பெரும்பாலும் பாதிக்கப்படுவது பெண்கள்தான் என்ற கருத்தியல் உண்டு. பெண்கள் தமது சமூக பழக்கவழக்கங்களால், அதிகளவு குடும்ப மற்றும் உறவினர்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த இணைப்பு பல காரணிகளால் வலுக்கட்டாயமாக அறுக்கப்படும்போது - இடைவெளி - ஏற்படும்போது அவளது உள்ளம் ஊனம் அடைகின்றது8. வடக்கு மாகாணத்தில் பெண்கள் தனிக்குடித்தனம் செல்லும் போது, வாழ்க்கைக்கு தன்னைத் தயார்படுத்தல் இல்லாத நிலையில் பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.



இம் மாகாணத்தில் பெண்கள் சுரண்டப்படுவதைக் கண்கூடாகவே காணமுடியும். குடும்ப பொருளாதரத்தின் நிமிர்த்தம் கல்வியைத் தொடரமுடியாத யுவதிகள் பல்பொருள் வாணிபம், விசேட அங்காடி, அறக்கட்டளை அங்காடி, புடைவைக்கடை, நகைமாளிகை, சாப்பாட்டுக்கடை, மருந்தகம், அச்சகம், தனியார் கல்விநிலையங்கள், முன் பள்ளிகள், பத்திரிகை நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் முதலிய இடங்களுக்கு தொழில் தேடி செல்கின்றனர். வேலை பழக்குதல் என்று கூறி ஊதியம் இல்லாமல் வேலை வாங்குதல், சேமநலநிதி கட்டப்படாமல் வேலை வாங்குதல், குறைந் ஊதியத்தில் கூடிய உழைப்பு, என சிறு முதலாளிமார்கள் அவர்களைச் சுரண்டி அவர்களின் உடல் வலு - கட்டு - குறைந்தவுடன், நடுத்தெருவில் விடுகின்றனர். இதனால், அவர்கள் உடல் - உள நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். சிலர் வழித்தடுமாறி பாலியல் தொழிலுக்கும் விழுகின்றனர் கட்டாயம் இழுக்கப்படுகின்றனர்.

மறுபக்கத்தில் இலங்கையில் பெண்கள் பொதுவாக கல்வியில், கலைகளில், காவற்துறை, வைத்தியத்றை, நிதித்துறை, விஞ்ஞானத்துறை, சட்த்துறை, தொழில்நுட்பத்துறை, நீதித்துறை, விளையாட்டுத்துறை என அனைத்து துறைகளிலும் பெண்கள் ஆணுக்கு நிகராக சிறந்து விளங்கினாலும் வடக்கு மாகாணத்தில் சிசுக்கொலை, கற்பழிப்பு பாலியல் வன்முறைகள் ஒழிந்தபாடில்லை. இதற்கு கருத்தியல் - உளவியல் - ரீதியான மாற்றம் வேண்டும். இல்லாவிடின் மாறாது.



தற்போது வடக்கு மாகாணத்தில் விஸ்தரிக்கப்பட்டுள் சிக்கல் விபசார விடுதிகளில் இளைஞர் - யுவதிகள் உல்லாசமாக இருத்தல் ஆகும். இதில் ஈடுபடும் இளைஞர்களில் அதிகமானோர் ஏற்கனவே திருமணமானவர்கள். ஆனால், யுவதிகளில் அநேகர் திருமணமாகாதவர்கள். இதற்கு பெண்கள் எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணமாக உள்ள போதும், ஆடம்பரத்தேவையும் நவீன தொழில்நுட்ப வசதிகளும் தொலைக்காட்சி நாடகங்களும், விளம்பரங்களும் முக்கியமான பங்காற்றுகின்றன..



தமிழ் அரசியல் அடிவருடிகளும் கட்சி உறுப்பினர்களும் காலந்தோறும் வடக்கில் பெண்களை இனவாதத் தீயைக் கக்கி பெண்களை நசுக்கியே வந்துள்ளனர். முன்னாள் பெண் போராளிகளின் வாழ்வாதாரம் மிகவும் கீழ் நிலையில் உள்ளமையை மாற்றியமைப்பதற்கு வழிவகைகளை உருவாக்காது சந்தர்ப்ப அரசியல் நடத்தி வருவது நகைப்புக்கு உரியது. சரியான அரசியல் வழிகாட்டியும் தலைமைத்துவமும் இன்மையால் இந்த முன்னாள் பெண் போராளிகள் அநாதரவாக விடப்பட்டுள்ளனர். தமிழ் அரசியலில் அதிகார வர்க்கம் சார்ந்த அரசியலே அன்று தொடங்கி இன்று வரை நடந்து வருகின்றமையே இதற்கு காரணம்.

பணியகங்களில் சேவையாற்றும் ஆணுக்கு ஊதியம் கிடைக்கின்றது. அவ்வாறு பணியாற்றுகின்ற ஆணுக்கு, சகல வசதிகளையும் செய்யும் பெண்கள், வீட்டிலிருந்து செய்யும் செயற்பாடுகளுக்கு பணரீதியான மதிப்புக்கள் கிடைப்பதில்லை. பல வீட்டுப் பணிகளை ஓய்வே இல்லாமல் செய்யும் இவ்வாறன பெண்கள் வடபகுதியில் அதிகமே. அவர்களே பெண் பிறப்பை வெறுக்கன்றனர்.

பொருளாதாரத்தில் பின்னிலையில் உள்ள குடும்பங்கள் தங்களின் பெண்பிள்ளைகளை வயது முதிர்ந் ஆடவர்களுக்குத் திருமணம் முடித்துவைத்தல், வெளிநாட்டு மோகத்தால் பதிவுத்திருமணம் செய்து விட்டு நீண்ட நாட்கள் காத்திருத்தல், அங்கு சென்றவர்கள் ஏமாற்றம் அடைதல், வாழ்வை வெறுத்தல், பிணமாக திருப்பி அனுப்பப்படல் இவ்வாறாக, திருமணம் தடைப்படல், பொருந்தா திருமணம், ஒழுக்கப் பிறழ்வுகள், பாலியல் சுரண்டல், குடும்பப் பிரிவு, தனிமையில் துன்புறல் என நெருக்கடிகளை எதிர் கொண்டு தற்கொலைக்குச் செல்கின்றனர்.

## முடிவுரை

“பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான்-புவி பேணி வளர்த்திடும் ஈசன்” - பாரதியாரின் மணிமொழி. அந்தவகையில் பெண்களின் ஞானத்தை அழிப்பதன் விளைவே இயற்கை அழிவும் தொற்று நோய்களும் மனித இனத்தை பிரம்மிக்கவைக்கின்றன. எனவே, வடக்கு மாகாணத்தில் மேலே காட்டியதைப்போல பெண்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தங்களும் உளவியல் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் சிரமங்களும் மிகுந்த நிலையில் ஏற்படும் உளவியல் நெருக்கடிகளும் ஏராளம். இடையிடையே அவற்றுக்கான சில தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் நல்லிணக்க ஆணைக்குழு பெண்கள் தொடர்பாக வைத்துள்ள திட்ங்களை செயற்படுத்துவதன் மூலம் உளவியல் முரண்பாடுகளை ஓரளவுக்குக் குறைக்கலாம். வடக்கு மாகாணத்தில் ஐ.நா. சிறுவர் கல்விக்கான நிதியம் பெண்கள் வலுவூட்டல் சட்டத்தில் உள்ளடங்கும் ஐந்து வலுவூட்டல் மட்டங்களான நலன் பேணல், அடைதல், விழிப்புணர்வைக்காட்டல், கட்டுப்பாடு, பங்குபற்றல் ஆகியவற்றை 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்திலிருந்து பூரணமாக நடைமுறைப்படுத்தினால், கட்டாயம் பெண் விடுதலை - சுதந்திரம் - கிட்டும். இவ் மாகாணத்தில் பெண்களுக்குக் குடும்பத்திலும் பொது இடங்களிலும் வேறுபடுத்திக்காட்டும் சம்பிரதாய விதிமுறைகளையும் சமூக விதி முறைகளையும் நீக்குதல் வேண்டும். பெண்களின் பூரண சுதந்திரத்திற்கு பெண்கள் மத்தியில் தங்களைப் பற்றியுள்ள தவறான கருத்தியலில் இருந்து ஒவ்வொரு பெண்ணும் விடுபடுதல் வேண்டும். தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் வடக்கு மாகாணப் பெண்கள் எதிர் காலத்தில் அனைத்துத் துறைகளிலும் பிரகாசிக்க வேண்டுமாயின் நீங்கள் யாரால், எப்படி? சுரண்டப்படுகின்றீர்கள் என்பதை உணர்ந்து உங்கள் விடுதலை - சுதந்திரம் - நோக்கிப் புறப்படுங்கள்.

உசாத்துணைகள்
1. பெண்கள் தலைமையிலான குடும்பங்களின் விபரங்கள், சமூகசேவைத் துறை, வடக்கு மாகாணம், 2018.
2. வடக்கு மாகாணத்தின் தரம் ஒன்றின் கல்வி, மாகாணக்கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம். 2021.
3. மங்கை, அ., (2005), பெண்ணிய அரசியல், கங்கு வெளியீடு, வரிசை - 05, சென்னை, பக்கம் - 23.
4. எங்கல்ஸ், பீ., குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், மூன்றாம் பதிப்பு, மாஸ்கோ. பக்கம் - 91.
5. சரோஜா, சி., (2013), வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம். பக்கம் - 03.
6. கணேசலிங்கன், செ.,(2001), பெண்ணடிமை தீர, ஐந்தாம் பதிப்பு, பாரி நிலையம், சென்னை. பக்கம் -132.
7. சண்முகலிங்கம், க., (2006), மனித உரிமைகளும் அபிவிருத்தியும், அகவிழி, 3,டொறிங்டன் அவெனியூ, கொழும்பு. பக்கம் - 60.
8. தேவகௌரி, (ஆண்டு குறிப்பிடப்படவில்லை), "பெண்கள் மாறாநிலை பாத்திரங்கள்", புனர் ஜீவிதம் - சஞ்சிகை, கல்வி அமைச்சு, வடக.கு மாகாணம். பக்கம் - 14.

# இங்கிலாந்து இளவரசரின் இலங்கை விஜயம்






அண்மையில் தனது 99ஆவது வயதில் உயிரிழந்த இளவரசர் பிலிப் 1954 இல் கண்டியிலுள்ள பேராதனை பல்கலைக் கழகத்திற்கு ராணி எலிசபெத் உடன் வருகை தந்த போது எடுக்கப்பட்ட புகைப்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம சிற்பி

ஜீவா ஹஜீவனின்

# சிங்கிரித்தலைவன்

ஆட்சி 23

முகலன் மந்திரித்து விட்டவனைப்போல அந்தக் கூடைப்பெண்ணின் பின்னால் நடந்து போனான்... அவளோ இடைக்கிடை அவனைத்திரும்பிப் பார்ப்பதும் புன்னகைப்பதும் நடப்பதுமாக தொடர்ந்தாள்... அவள் நடக்கும் போது வளைந்து வளைந்து ஆடும் அவள் இடையை ரசிப்பதும், பின்னிவிட்ட கூந்தலின் ஆட்டத்தைக் கணிப்பதுமாக இருந்த முகலன், அவள் திரும்பும் போதெல்லாம் கடற்கரையின் அழகை இரசித்தான் ...

இப்போது இரவும் பகலும் தம்முள் கலந்து, மயக்கம் தரவல்ல மகவொன்றைப் பொழுதாய் பெற்றிருந்தன... அந்த பொன்னிறப்பொழுதில், கீழக்கரை ஜாலக்கரையாக மாயம் செய்தது... பாணன் ஒருவன் கரைவந்திருந்த படகொன்றின்மீதிருந்து,

“ புன்னை நுன்தாது உறைத்தரு நெய்தல்
பொன்படு மணியில் பொறப்பத் தோன்றும்
மெல்லம் புலம்பன் வந்தென
நல்லன வாயின தோழியென் கண்ணே..”
(ஐங்குறுநூறு.189)

என்று சங்கப்பாடலை யாழ் இசைத்துப் பாடத்தொடங்கியிருந்தான்... பகலெல்லாம் உழைத்துக் களைத்த சிலர் பாணனின் குரலில் மயங்கி அவனைச் சூழ அவன் குரலும் யாழிசையும் இன்னும் அதிகமாகிக் காற்றோடு கலந்தது! குளிர்ந்த காற்றும் பாணனின் பாடலும் கடலின் பரிசமும் முகலனின் கடந்த கால துன்ப வாழ்வை மறக்கச்செய்தது... உண்மையில் அவன் மந்திரித்து விடப்பட்டவன் போலத்தான் மாறியிருந்தான்!



அவளுடன் அவன் நீண்ட தூரம் நடந்து வந்து ஒரு கோயிலை அடைந்தான். அந்தக்கோயில் இப்போது தான் கட்டப்பட்டுக்கொண்டிருக்க வேண்டும்... கருங்கல்லில் பீடமும் தூ ண்களும் நிறுத்தப்பட்டிருந்தது... அந்தத் தூ ண்களில் அழகிய அழகிய சிற்பங்கள் குறைவேலைகளாக செதுக்கப்பட்டிருந்தது.. சிலது முடிவடைந்துமிருந்தது... அதில் கையிலே கரும்பு ஏந்தி நிற்பதைப்போல வடிவமைக்கப்பட்டிருந்த பெண்ணொருத்தியின் சிற்பம், இந்தக்கூடைபெண்ணுடன் எவ்வளவு ஒத்துப்போகிறது என்ற ஆராய்ச்சியில் தான் தேடிவந்த மகாநாமரையே மறந்து போயிருக்கவேண்டும் முகலன்! ஒவ்வொரு தூ ண்களின் கலைவண்ணங்களையும் மங்கிய ஒளியில் பார்த்தபடியே நடந்தான் முகலன்... அர்த்த மண்டபத்தில் இருந்து,

“வா...முகலா...வா..” என்ற மகாநாமரின் அழைப்பால் திடுக்குற்ற முகலன், தன்நிலையடைந்து குரல் வந்த திசையில், திரும்பினான்... சிறிய தீப்பந்தம் ஒன்று எரிந்துகொண்டிருந்தது... செதுக்கப்படாத கருங்கல் பாளத்தின் மேலே மகாநாமரும் உத்தமரும் அமர்ந்திருக்க அவர்களுக்குப்பின்னால் சீலகலனும் நின்றிருந்தான்... முகலன் அவர்களை நெருங்கிச் சென்று வணங்கினான்...

“உத்தமர் தான் அமைக்கும் இந்த சிவாலயத்தை எனக்கு காண்பிக்க அழைத்துவந்தார்... இருவரும் பல விடயங்களை ஆலோசித்துக்கொண்டிருந்தோம்...நேரம் போனதே தெரியவில்லை... நீ அசதியாக உறங்கிக்கொண்டிருந்தாய்... உன்னை எழுப்ப விரும்பவில்லை... ஆமாம் உன்னை அழைத்து வந்த குழலி எங்கே..?”

“ஓ ... அவள் பெயர் குழலியா..?” முகலன் தனக்குள் முணுமுணுத்தான்...

“என்ன முகலா ... அசதி தீரவில்லையா...? குழலியிடம் உன்னையும் இங்கே அழைத்துவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருந்தேனே... வழியில் ஏதும் வம்பு செய்தாளா?" என்று உத்தமர் கேட்க,

"ஹம்... எங்கே... உங்கள் இளவரசருக்கு தான் பேச்சே வரவில்லையே... பிறகு எப்படி..? வழிமட்டும் தான் காட்டினேன் பெரியப்பா..."

என்று முகலனின் பின்னே, செதுக்கப்படாத தூணில் சாய்ந்து நின்றபடி குழலி தன் கூடையை மார்போடு அணைத்துக்கொண்டு கூறினாள்... முகலனுக்கு அவளைத்திரும்பிப் பார்க்க வேண்டும் போல் இருந்தாலும் மகாநாமரும் உத்தமரும் முன்னே இருப்பதால் தன் ஆசைக்குதிரைக்கு கடிவாளம் போட்டுக்கொண்டான்... முகலனின் கண்களில் வெட்கம் எட்டிப் பார்த்தது!

"மகனே, முகலா ... உத்தமரின் தம்பியின் மகள் தான் இந்தக் குழலி... குறும்புக்கார பெண்... என்னுடனேயே வம்பு செய்வாள்... கடந்த முறை இங்கு வரும் போது கைப்பாவை வைத்து விளையாடியவள்... கடகடவென வளர்ந்து விட்டாள்.."

அவளைப்பற்றி இன்னும் வினவி அறியவேண்டும் போல் இருந்தாலும், அது தருணமல்ல என்று தவிர்த்த முகலன்,

"ஐயனே... உத்தமரோ... ஒரு பௌத்த துறவி... அவர் அமைப்பதோ இந்த அழகிய சிவாலயம்... குழப்பமாக இருக்கிறதே..."

உத்தமரும் மகாநாமரும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்தார்கள்... சீலகாலனும் சிரித்தபடியே, எரிந்துகொண்டிருந்த தீப்பந்தத்தில் இருந்து இன்னும் சில தீப்பந்தங்களை எரியவைத்து அப்பாலே சென்று தூண்களில் அவற்றை கொழுவினான்.

"முகலா... நான் புத்தனை ஏற்றுக்கொண்ட ஒரு சிற்பி... என் ஆற்றலை நான் கலையாகவே காண்கின்றேன்... இதோ பார் நாம் அமர்ந்திருக்கும் இந்தக்கல், ஒரு சிவலிங்கமாகவோ, அல்லது ஒரு புத்தனாகவோ உருப்பெற வேண்டும் என்றால், இதோ என் உளியின் உழைப்பு தேவை... கல்லில் எந்தக் கடவுளை காண்பது என்று என் கலையே தீர்மானிக்கிறது... மதங்களின் மதத்தில் சிதையாத ஊர் இது! இந்த துறைமுகத்தை நிர்வகிக்கும் தலைவனின் ஆணையை ஏற்று இப்பணியை சில ஆண்டுகளாக செய்து வருகின்றேன்..."

உத்தமரின் முகமும் ஒரு ஒளிப்பந்தத்தை போல் பிரகாசித்தது...


"மன்னிக்க வேண்டும் ஐயனே... தங்கள் கலை வாழும்... என் மனதுள் இருந்த ஐயம் தெளிந்து அறிவும் பெற்றேன்." என்றவன் அவரை வணங்கி நின்றான்!

உத்தமரும் மகாநாமரும் எழுந்து அவன் அருகில் வர அவன் வீழ்ந்து வணங்கினான்... "எழுந்திரு முகலா... கூடாரம் திரும்புவோம்.. இருள் சூழ்ந்து விட்டது..." சீலகாலன் கையில் ஒரு சுடரை ஏந்தி முன்னே நடக்கத்தொடங்கினான்...

"குழலி...."

தூணில் செதுக்கப்பட்டிருந்த சிலையொன்று உயிர்பெற்று, தூணில் இருந்து கழன்று, தொப்பென முன்னே குதித்து கூடையை ஆட்டிய படி நடக்கத்தொடங்கியது...

**இன்னும் நடக்கும்...**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எஸ்.எஸ்.நுஜன்

இதுவரை அணிகள் கடந்து வந்த பாதை மற்றும் தற்போதைய நிலை குறித்து பார்ப்போம்.

## ராஜஸ்தான் ரோயல்ஸ்

கடந்த ஆண்டு இறுதி இடத்தை பிடித்த அணியானாலும் ஐபிஎல் போட்டித் தொடரில் முதல் சாம்பியனாக உருவெடுத்த அணி. 2008 இல் அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து நாயகன் கிங் ஷேர்ன் வார்னே தலைவராகவும் பயிற்சியாளராகவும் செயற்பட்டிருந்தார். ஷேர்ன் வாட்சன், சோகைல் தன்வீர் கம்ரான் அக்மல், யூசுப் பதான், முனாப் பட்டேல் போன்ற முன்னணி வீரர்களுடன் மற்றும் அறிமுகமில்லாத



பல வீரர்கள் இடம்பெற்ற அணி முதல் ஐபிஎல் கோப்பை தனதாக்கிக் கொண்டது. சென்னையின் தற்போதைய கலக்கல் நாயகன் ரவீந்திர ஜடேஜாவும் இந்த அணியில் இருந்த வீரர் தான். அறிமுகமில்லாத திறமையான பல வீரர்களுக்கு பெயர் பெற்ற அணி. பின் 2013 இல் தான் பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

தலைவர்கள் வரிசையில் ஷேர்ன் வார்னே, ராகுல் டிராவிட், ஷேர்ன் வாட்சன், ஸ்டீவ் ஸ்மித், அஜின்கயா ராகானே போன்றோர் தலைமை தாங்கி இருக்கின்றனர். இந்த முறை புதிய தலைவராக சாம்சன் மற்றும் புதிதாக இயக்குனராக இலங்கையின் கனவான் குமார் சங்கக்காரா நியமிக்கப்பட்டுள்ளனர். இன்று வரை ஷேர்ன் வார்னே இந்த அணியுடன் பயணித்து வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த சில வருடங்களுக்கு முன் இவர்கள் ஏலத்தின் போது அதிகமாக பணத்தை செலவழிப்பதே இல்லை. முதல் முதலாக கிரிக்கெட் அக்கடமி உருவாக்கிய அணியும் இதுவே. தற்போது அதிக இங்கிலாந்து வீரர்கள் வெளிநாட்டு வீரர்களாக உள்ள அணி. இங்கிலாந்திலும் தங்கள் அக்கடமி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

## சென்னை சூப்பர் கிங்ஸ்

கடந்த வருடத்தை தவிர்த்து விளையாடிய அனைத்து வருடங்களும் பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறிய அணி. இன்றுவரை தலைவர், பயிற்சியாளர்கள், நிர்வாகம் என்று எதிலும் மாற்றமே (சில தவிர்த்து) இல்லாத அணி. Consistency என்பதற்கு வரைவிலக்கணமான அணி.

தோணி தலைவராக உள்ள அணி: முதல் வருடம் இறுதி போட்டி, பின் 2009 மற்றும் 2010 இல் ஐபிஎல் சாம்பியன்கள். ஐபிஎல் என்பது சென்னையுடன் யார் இறுதி போட்டியில் ஆடுவது என்பதற்கான தொடராக மாறிப்போனது தான் உண்மை. பின் 2015இல் ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ், சூதாட்டத்தில் ஈடுபடுபட்டு இரு வருடங்கள் தடை செய்யப்பட்டனர். 2018 இல் ஐபிஎல் மகுடம் சூடி நாங்கள் திரும்பவும் வந்திட்டோம் என்றது சென்னை சூப்பர் கிங்ஸ். இந்த அணியின் வீரர்களை பார்த்தால் தல என்கிற தோனி, சின்ன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தல என்கிற ரெய்னா, மேத்யூ ஹைடன் என்கிற நாமக்கல் ஆஞ்சநேயர், முத்தையா முரளிதரன், அன்ட்ரூ பிளின்டோவ், ஸ்டீபன் பிளமிங், மைக்கேல் ஹாசி,அல்பி மோர்கல், ஷேர்ன் வாட்சன், பாலாஜி, பத்ரிநாத், அஸ்வின் என்று பெரும் தமிழக இந்திய வெளிநாட்டு வீரர்கள் பட்டாளமே கலக்கி இருக்கிறது. மொய்ன் அலி, புஜாரா, கிருஷ்ணப்பா கௌவுதம், ஹரிசங்கர் ரெட்டி, ஹரி நிசாந் போன்ற வீரர்களை இந்த முறை ஏலத்தில் எடுத்திருக்கிறது. கடந்த வருடம் விளையாடிய சுரேஷ் ரெய்னாவும் இம்முறை அணிக்கு திரும்பி இருக்கிறார்.

## பஞ்சாப் கிங்ஸ்

இதுவரை கிங்ஸ் லெவன் பஞ்சாப் என்றிருந்த அணி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட்டின் இளவரசன் யுவராஜ் சிங், இலங்கையின் சங்கக்காரா மற்றும் மஹேல, ஷோன் மார்ஷ், பிராட் லீ, அடம் கில்கிறிஸ்ட், பியூஸ் சாவ்லா, வீரேந்திர ஷேவாக் என்று பல நட்சத்திர வீரர்கள் இந்த அணிக்கு விளையாடி இருக்கிறார்கள். 2008 இல் இரண்டாம் இடம் பிடித்து அரையிறுதி சென்றனர். இன்றுவரை தலைமை தாங்கியவர்களில் இந்த அணியின் சிறந்த தலைவராக இருந்த யுவராஜ் சிங்னை 2010இல் மாற்றி சங்கக்காராவிடம் கொடுத்தனர்: அணி கடைசி இடம் பிடித்தது. பின் அடம் கில்கிறிஸ்ட்யை 2011 ஏலத்தில் எடுத்து தலைமை பொறுப்பை கொடுத்தனர். இருந்தாலும் அணி பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற வில்லை.

பின் 2014 இல் ஜோர்ஜ் பெய்லி தலைமை தாங்க கிளென் மக்ஸ்வெல், டேவிட் மில்லர் வாணவேடிக்கை காட்ட இறுதி போட்டி வரை சென்று கொல்கத்தா விடம் தோற்றனர். பின் எந்த வருடமும் பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெறவில்லை. இவர்கள் எப்போதும் தலைவரை மாற்றுவது பயிற்சியாளரை மாற்றுவது என்று மாற்றி பின்னடைவு பெற்றதே அதிகம். இம்முறை அதே பயிற்சியாளர் அனில் கும்ளே, அதே தலைவர் கேஎல் ராகுல் என்று மாற்றம் இல்லாமல் ஏலத்திலும் ரில்லி மெர்டித், அஜெய் ரிச்சர்ட்சன், டேவிட் மாலன், தமிழக வீரர் சாருக்கான் என்று நல்ல வீரர்களை எடுத்து இருக்கின்றனர்.

## கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

கொல்கத்தாவின் இளவரசன் தாதா சௌராவ் கங்குலி தலைமை தாங்க ரிக்கி பாண்டிங், சோகைப் அக்தர், கிறிஸ் கெய்ல், மக்கெலம், உமர் குல், அஜித் அகர்கார், பிராட் ஹோட்ஜ்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் ஹசி, சால்மன் பட் என்று ஒரு பெரும் நட்சத்திர பட்டாளமே வெற்றிகளை குவித்த ஆஸியின் பயிற்சியாளர் ஜோன் புச்சனன் பயிற்றிவிப்பில் களம் இறங்கியது. ஐபிஎல் கிரிக்கெட்டின் முதல் போட்டி அது. பிரெண்ட்டன் மக்கெலம் வாணவேடிக்கை நடத்தி 158 ஓட்டங்களை குவித்து அட்டகாசமான ஒரு ஆரம்பத்தை, தன் அணிக்கு மட்டுமல்ல ஐபிஎல் என்ற திருவிழாக்கே கொடுக்க ரோயல் சலஞ்சேர்ஸ் பெங்களூரை முதல் போட்டியிலே அதிரடியாக வீழ்த்தி வெற்றியுடன் ஆரம்பித்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்இன் ஐபிஎல் பயணம்.

2011இல் முதல் முறையாக பிளே ஒப் சுற்றுக்கு முன்னேறிய கொல்கத்தா 2012 மற்றும் 2014 இல் கவுதம் கம்பீர் தலைமையில் ஐபிஎல் கிண்ணத்தை தன்வசமாக்கியது. பின் 2016,17,18 களிலும் பிளே ஒப் சுற்றினை எட்டி பார்த்து இருக்கிறது நைட் ரைடர்ஸ். கடந்த இரு வருடங்களாக பிளே ஒப் சுற்றுக்கு முன்னேற முடியாத இந்த அணி, இம்முறை மக்கெலம்



பயிற்றுவிப்பாளராகவும் இயன் மோர்கன் தலைவராகவும் தொடர களம் இறங்குகிறது. கரீபியன் பிரிமியர் லீக்கிலும் ஒரு அணியை வைத்திருக்கும் நைட் ரைடர்ஸ், அடுத்த வருடம் பிக்பாஸ் தொடரிலும் ஒரு அணியை (Hobart Hurricanes) வாங்குகிறது என்பது மேலதிகமான தகவல்.

***மற்றைய நான்கு அணிகளும் அடுத்த இதழில்...***

## எண்களில் எதுவும் இல்லை
## எண்ணங்களே எல்லாம் என்று
## எழுந்த துமியின் ஆரம்ப நாள் 13.04.2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org